Registered as a news paper. பக்கங்கள் பன்னிரண்டு விலை ரூபா 7.00

நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்




மலர்: 03 திருவள்ளுவர் ஆண்டு :2036 மாசி – 05 ஆம் நாள் ஹிஜ்ரி 1423 முஹர்ரம் 07 (17.02.2005) வியாழக்கிழமை இதழ்: 140


# கௌசல்யனின் படுகொலையைக் கண்டித்த ஐ.நாவுக்கு எதிரான ஆர்ப்பாட்டங்களின் பின்னணியில் அரசாங்க அமைச்சர்கள்!

(கொழும்பு)

விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு – அம்பாறை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் கௌசல்யன் உள்ளிட்ட போராளிகள் வெலிக்கந்தவில் சுட்டுக்கொல்லப்பட்டதை ஐ.நா. பொதுச்செயலாளர் கொபி அனான் கண்டித்ததற்கு எதிராக – சிங்கள பேரினவாத சக்திகள் மேற்கொண்டு வரும் நடவடிக்கைகளின் பின்னணியில் அரசாங்கமே இருப்பதாக கொழும்பு அரசியல் வட்டாரங்களில் பரபரப்பாகப் பேசப்படுகின்றது.

ஐ.நா.செயலரின் இந்தக் கண்டன அறிக்கை, விடுதலைப் புலிகளுக்கு வழங்கப்பட்ட அங்கீகாரம் என்றும், இது இலங்கையின் இறமையைப் பாதிக்கின்ற சம்பவம் என்றும் சிங்களப் பேரினவாத சக்திகள் கடந்த சில நாட்களாக பெரும் பிரசாரத்தில் ஈடுபட்டு வருவதுடன் ஆங்காங்கே எதிர்ப்புப் போராட்டத்திலும் ஈடுபட்டுவருகின்றன. (12 ஆம் பக்கம் பார்க்க)

## கல்முனை குழந்தை அபிலாஷ் பெற்றோரிடம் நேற்று ஒப்படைப்பு!



(அம்பாறை)

சுனாமி அனர்த்தத்தின் பின் அனாதரவான நிலையில் மீட்கப்பட்டு, ஒன்பது பெற்றோர்கள் உரிமை கொண்டாடிய மூன்று மாதக் குழந்தை அபிலாஷ் (பேபி81) நேற்று உண்மைப் பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டது.

பலர் உரிமை கோரியதற்காக கல்முனை நீதிவானின் உத்தரவின் பேரில் கொழும்பு தனியார் வைத்தியசாலை ஒன்றில் மரபணுப் பரிசோதனை நடத்தப்பட்டது.

இந்தப் பரிசோதனையின் மூலம் ஜெயராஜ் - ஜெனிற்றா தம்பதிகளே இந்தக் குழந்தையின் பெற்றோர் என இனங்காணப்பட்டதையடுத்து, நேற்று அவர்களை நீதிமன்றில் ஆஜராகும் படி நீதிமன்றம் கட்டளையிட்டிருந்தது.

குழந்தையின் தாயார் (12 ஆம் பக்கம் பார்க்க)

## அமெரிக்காவின் இரு முன்னாள் ஜனாதிபதிகள் ஞாயிறன்று இலங்கை வருவர்!



(வொஷிங்டன்)

அமெரிக்காவின் இரண்டு முன்னாள் ஜனாதிபதிகள் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஜோர்ஜ் புஷ் (சீனியர்) மற்றும் பில் கிளின்ரன் ஆகியோரே இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளனர். ஐ.நாவின் விசேட தூதுவர்களாக - சுனாமியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் நிவாரணப் பணிகளை மேற்பார்வை செய்வதற்கு இவர்கள் நியமிக்கப்பட்டிருந்தனர்.

இதன்படி எதிர்வரும் 20 ஆம் திகதி இலங்கைக்கு வரவுள்ள இவர்கள் இரண்டு நாட்கள் இங்கு தங்கியிருப்பார்கள் என்றும் இக்காலப் பகுதியில் தென்பகுதியில் ஏற்பட்ட அழிவுகளை நேரில் பார்வையிடுவர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.



யில் மடக்கப்பட்டு, ஒன்பது பெற்றோர்கள் உரிமை கொண்டாடிய மூன்று மாதக் குழந்தை அபிலாஷ் (பேபி81) நேற்று உண்மைப் பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டது.

பலர் உரிமை கோரியதற்காக கல்முனை நீதிவானின் உத்தரவின் பேரில் கொழும்பு தனியார் வைத்தியசாலை ஒன்றில் மரபணுப் பரிசோதனை நடத்தப்பட்டது.

இந்தப் பரிசோதனையின் மூலம் ஜெயராஜ் - ஜெனிற்றா தம்பதிகளே இந்தக் குழந்தையின் பெற்றோர் என இனங்காணப்பட்டதையடுத்து, நேற்று அவர்களை நீதிமன்றில் ஆஜராகும் படி நீதிமன்றம் கட்டளையிட்டிருந்தது.

குழந்தையின் தாயார் (12 ஆம் பக்கம் பார்க்க)



(வொஷிங்டன்)

அமெரிக்காவின் இரண்டு முன்னாள் ஜனாதிபதிகள் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஜோர்ஜ் புஷ் (சீனியர்) மற்றும் பில் கிளின்ரன் ஆகியோரே இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளனர். ஐ.நாவின் விசேட தூதுவர்களாக - சுனாமியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் நிவாரணப் பணிகளை மேற்பார்வை செய்வதற்கு இவர்கள் நியமிக்கப்பட்டிருந்தனர்.

இதன்படி எதிர்வரும் 20 ஆம் திகதி இலங்கைக்கு வரவுள்ள இவர்கள் இரண்டு நாட்கள் இங்கு தங்கியிருப்பார்கள் என்றும் இக்காலப் பகுதியில் தென்பகுதியில் ஏற்பட்ட அழிவுகளை நேரில் பார்வையிடுவர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

# யாழ். கல்விச் சமூகத்தினர் நேற்று கண்டனப் பேரணி!



(யாழ்ப்பாணம்)

மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் லெப். கேணல் கௌசல்யன், மாமனிதர் சந்திரநேரு உட்பட ஆறு பேர் படுகொலை செய்யப்பட்ட சம்பவத்திற்கு பின்னணியாகவுள்ள இலங்கை அரசின் இரட்டை வேடத்தைக் கண்டித்து, மூன்றாவது நாளாகவும் மாபெரும் கண்டனப் பேரணி, நேற்று யாழ். (12 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ்ச்செல்வன் தலைமையிலான—

# புலிகளின் முக்கியஸ்தர்கள் திருகோணமலை விஜயம்!

(திருகோணமலை)

தமிழீழ அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் நேற்று திருகோணமலைக்கு விஜயம் செய்தார். இவருடன் தமிழீழ நிதிப் பொறுப்பாளர் தமிழேந்தி, நீதி நிர்வாகப் பொறுப்பாளர் பரா, மூத்த உறுப்பினர் க.வே.பாலகுமாரன், மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் பொன் தியாகம் ஆகியோரும் உடன் சென்றனர்.

நேற்றுப் பிற்பகல் 3 மணிக்கு விமானப் படைக்குச் சொந்தமான ஹெலிகொப்டர் மூலம் திருமலைக்கு புறப்பட்ட தமிழ்ச்செல்வன் தலைமையிலான குழுவினர் சம்பூர் மகாவித்தியாலய மைதானத்தில் சென்று இறங்கினர்.

இவர்களை திருமலை மாவட்டக் கட்டளைத் தளபதி கேணல் சொர்ணம் மற்றும்மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் எழிலன் மற்றும் தளபதிகள், போராளிகள் வரவேற்றனர்.

(12 ஆம் பக்கம் பார்க்க)





இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை...
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021-2223891, 2226297, 077-2349999, 011-2372952-3, 011-2360290, 011-2360291
email: jaffna@expoavi.com, reservations@expoavi.com.
EXPOAIR
Your friend in the skies...

'சுனாமி' அனர்த்தத்தின்போது

# சாரதி - வாகன அனுமதிப் பத்திரங்களை இழந்தவர்களுக்கு உடன் வழங்க ஏற்பாடு!

சுனாமி அனர்த்தத்தால் சாரதி அனுமதிப்பத்திரம், வாகன உரிமைச் சான்றிதழ் ஆகியவற்றை இழந்தவர்கள் அவற்றை உடனடியாகப் பெற்றுக்கொள்வதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளதாக கொழும்பு மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் சுற்றுநிருபம் ஊடாக அறிவித்துள்ளார்.

சாரதி அனுமதிப்பத்திரங்களில் 'ஏ' எழுத்து உடையவர்களுக்கு நாரஹேன்பிட்டியிலும் 'ஏ' எழுத்து இல்லாத சாரதி அனு மதிப்பத்திரங்களுக்கு வெறஹெரவிலும் வழங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

தற்காலிகமாக வழங்கப்பட்டு அதற்கான கோவைகள் தலைமைக் காரியாலயத்திற்கு அனுப்பப்படாமலுள்ள தற்காலிக சாரதி அனுமதிப்பத்திரங்கள் விடயத்தில் அந்தந்தமாவட்ட மோட்டார் வாகன பரீட்சகரால் நடவடிக்கை எடுக்கப்படும்.

சாரதி அனுமதிப்பத்திரங்களைப் பெறுவதற்கு 2 1/2 அளவுகளைக் கொண்ட மூன்று புகைப்படங்களும் அவைகளின் மறுபுறத்தில் தேசிய அடையாள அட்டை இலக்கம், பெயர் ஆகியவற்றைக் குறிப்பிட்டு கிராம அலுவலரால் உறுதிப்படுத்தப்பட்டிருப்பதோடு, விண்ணப்பதாரி சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டுள்ளார் என கிராம அலுவலரால் உறுதிப்படுத்திய கடிதமும் சமர்ப்பிக்கப்படவேண்டும்.

வாகனப் பதிவுச் சான்றிதழ்களை மேற்படி அனர்த்தத்தில் தவறவிட்டவர்களின் பதிவுகளும் மோட்டார் வாகன போக்குவரத்து தலைமைக் காரியாலயத்தில் மேற் கொள்ளப்பட்டு வருகின்றன.

அதற்கு பாதிப்பிற்கு உள்ளானவர் என்பதனை உறுதிப்படுத்தும் கடிதத்தோடு உரிமையை உறுதிப்படுத்தும் புகைப்படங்களும் சமர்ப்பிக்கப்பட வேண்டும். பொலிஸ் முறைப்பாடு அவசியமற்றதாகும்.

இவைகள் தொடர்பான மேலதிக விபரம், மாவட்ட செயலக மோட்டார் வாகன போக்குவரத்துக் கிளையிலுள்ள விளம்பரப் பலகையில் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது என கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் இராசநாயகம் தெரிவித்தார்.

## உதைபந்தாட்ட சம்மேளனத் தலைவர் யாழ்.வருகின்றார்!



இன்று யாழ். வருகைதரும் உதைபந்தாட்ட சம்மேளன நிறைவேற்றுக்குழுத் தலைவரும் உதைபந்தாட்ட சம்மேளனத்தின் உபதலைவருமான வி.மணிலால் பெர்னாண்டோ, பிற்பகல் 5 மணியளவில் யாழ். சென். ஜோன்ஸ் கல்லூரி மண்டபத்தில் யாழ்.லீக்கில் இணைந்த கழகப் பிரதிநிதிகளைச் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளார்.

இந்தச் சந்திப்பில் விளையாட்டுக் கழகங்களின் இரு பிரதிநிதிகளைக் கலந்துகொண்டு, யாழ்.மாவட்ட உதைபந்தாட்ட வளர்ச்சி பற்றிய தமது ஆலோசனைகளை வழங்குமாறு யாழ்.மாவட்ட உதைபந்தாட்ட லீக் செயலர் கேட்டுள்ளார்.

## வலைப்பந்தாட்ட இறுதிப் போட்டி!

சண்டிலிப்பாய் கல்விக்கோட்ட வலைப்பந்தாட்ட இறுதிப்போட்டி இன்று பிற்பகல் 2.30 மணிக்கு பண்டத்தரிப்பு மகளிர் உயர்கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இந்த இறுதிப்போட்டியில் 15 வயதின் கீழ் பிரிவில் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியை எதிர்த்து இளவாலை கன்னியர்மடம் மகாவித்தியாலயமும் -

17 வயதின்கீழ் பிரிவுப் போட்டியில் - சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியை எதிர்த்து பண்டத்தரிப்பு ஜசிந்தா றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் மகாவித்தியாலயமும் மோதவுள்ளன.

19 வயதின் கீழ் பிரிவில் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியை எதிர்த்து பண்டத்தரிப்பு மகளிர் உயர் கல்லூரி மோதவுள்ளது. (69)

## லொத்தர் சபைத் தலைவர் யாழ்ப்பாணம் வருகிறார்!

தேசிய லொத்தர்சபைத் தலைவர் பி.ஏச்.ஜெயவர்த்தன எதிர்வரும் 23 ஆம் திகதி யாழ்.வருகிறார்.

தேசிய லொத்தர்சபையின் சேவையை யாழ்மாவட்டத்தில் விஸ்தரிப்பது தொடர்பாகவும், லொத்தர் சபைக்கு முகவர்களை நியமிப்பது தொடர்பாகவும் யாழ்.மாவட்ட அரச அதிகாரிகளுடன் யாழ்.செயலகத்தில் கலந்துரையாடல் ஒன்றையும் அவர் நடத்தவுள்ளார்.

## அவசர கலந்துரையாடல்!

யாழ்ப்பாணக் கோட்டப் பாடசாலை அதிபர்களுக்கான அவசர கலந்துரையாடல் ஒன்று இன்று பிற்பகல் 2 மணிக்கு யாழ். கோட்டக் கல்வி அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்.கோட்டக்கல்வி அலுவலகம் தற்போது இயங்கிவரும் யாழ். வைத்தீஸ்வரக் கல்லூரியில் இடம்பெறவுள்ள இந்தக் கலந்துரையாடலில் கலந்துகொள்ளுமாறு அதிபர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

அதிபர்கள் எவரும் தமது பிரதிநிதிகளை அனுப்பாது தாமே கலந்து கொள்ளவேண்டும் என கோட்டக் கல்வி அதிகாரி எஸ்.தங்கராஜா அறிவித்துள்ளார்.

## மனித எலும்புக்கூடுகள் நுணாவிலில் மீட்பு!



சாவகச்சேரி - நுணாவில் ஆறுமுகம் வீதியிலுள்ள தனியார் காணி ஒன்றில் மிதிவெடிகள் அகற்றும் பணியில் ஈடுபட்டிருந்த ஹலோ ட்றஸ்ற் நிறுவன மீட்புப் பணியாளர்கள் அங்கு மிதிவெடி அகற்றிக்கொண்டிருந்த வேளை குழியொன்றிலிருந்து மனித எலும்புக்கூடுகளை கண்டெடுத்துள்ளனர்.

நேற்றுமுன்தினம் காலை மீட்புப்பணியில் ஈடுபட்டவேளை சந்தேகத்திற்கிடமானமுறையில் குழியொன்று காணப்பட்டதையடுத்து அந்தப் பகுதியை தோண்டிய வேளை இரு எலும்புக்கூடுகள் மீட்கப்பட்டன. இதற்கு சமீபமாக 20-30 வயது வரையான பெண்கள் அணியும் ஆடைகளும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை கடந்த வாரம் இந்தப் பகுதியில் மனித மண்டையோடு ஒன்று மீட்கப்பட்டதாகவும் தெரியவருகிறது. (29)

## அளவைகளுக்கு முத்திரையிடல்!

(யாழ்ப்பாணம்)

நிறுத்தல், அளத்தல் பரிசோதகரால் நல்லூர் பிரதேசசபை அலுவலகத்தில் இன்று 17 ஆம் திகதி முதல் 18, 21, 22, 28 ஆம் திகதிகளில் காலை 9.30 மணி தொடக்கம் பிற்பகல் 2 மணிவரை நிறுத்தல், அளத்தல் கருவிகள் பரிசோதிக்கப்பட்டு முத்திரையிடப்படவுள்ளதால் சகல வர்த்தகர்கள் மற்றும் வியாபாரிகள் குறிப்பிட்ட திகதிகளில் நிறுத்தல், அளத்தல் கருவிகளுடன் வருகைதந்து கருவிகளுக்கு முத்திரையிட்டுச் செல்லுமாறு நல்லூர் பிரதேசசபை செயலாளர் பொ. வைரமுத்து கேட்டுள்ளார். (63)

## விபத்தில் சிக்கி இருவர் காயம்!

வேம்பிராய் பகுதியில் மோட்டார் சைக்கிள் விபத்தில் நான்கு பேர் காயமடைந்த நிலையில் யாழ். போதனாவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்றுமுன்தினம் இரவு நடைபெற்ற விபத்தின்போது சாவகச்சேரி தச்சன்தோப்பைச் சேர்ந்தவர்களான எஸ்.கரன் (வயது-32), லக்ஷ்மன் (வயது35) ஆகியோரே காயமடைந்து சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

வேகமாகச் சென்றுகொண்டிருந்த மோட்டார் சைக்கிள் வீதிக்கு குறுக்கே ஓடியநாயுடன் மோதியதில் இந்த விபத்துஏற்பட்டதாகத் தெரியவருகிறது. (29)


Dialog GSM டயலொக்

100/=, 400/=, 1000/= விலைகளில் கையடக்கத் தொலைபேசி அட்டைகளையும் Sim இணைப்புக்களையும் மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள

kit

எந்நேரமும் உன்னுடன்....!

Sri Murugan
Tele Communication
& Agency Post Office
303, K.K.S. Road, Jaffna.
T.P. :21 222 5392, Fax: 222 3435
(C/3828)

செவ்விளக்கு
-நாடகம்-
புரட்சியின் பேரெளியில் இருளார்ந்த
இரவு முழுவதும் ஓர் நாள்
காலம்: 19.02.2005 (சனி)
20.02.2005 (ஞாயிறு)
நேரம்: பி.ப. 6.00 மணி
இடம்: யாழ்.பல்கலைக்கழக கலைப்பீட வளாகம்
(O.LB கட்டடத்திற்கு முன்னுள்ள திறந்தவெளி)
Five Theatre Students Group
University Of Jaffna.
விளம்பர அனுசரணை: நமது ஈழநாடு

நிறைஞ்சனாஸ்
ரஜனி, அம்பிகா, சத்தியராஜ் நடித்த
நான் சிகப்பு மனிதன்
கா.நே. (பு.நே) 11.00, 2.45, 6.00

நாதன்ஸ் யாழ்ப்பாணம் குளிரூட்டப்பட்டது
15.02.2005 முதல் அனேகரின் வேண்டுகோளுக்கிணங்க காதல் என்னும் திரை ஓவியம் திரையிடப்பட்டுள்ளது.
காதல் கா.நே(பு.நே) 10.30, 2.30, 6.30, 9.30
டைட்டானிக் டைட்டானிக் மறு அறிவித்தல் வரை காண்பிக்கப்படமாட்டாது.

மனோகரா திரையரங்கு யாழ்ப்பாணம்
M.குமரன் கா.நேரம்: 10.30, Son of மகாலட்சுமி
5 ஆவது வெற்றி வாரமாக - இளைய தளபதி விஜய், திரிஷா நடித்த
திருப்பாச்சி கா.நேரம்: 6.30, 9.30 (பு.நே.)
நாளை முதல் விஜயின் சுக்ரன்
ஆசன முற்பதிவுகள் ஏற்றுக்கொள்ளப்படும்

ராஜா யாழ்ப்பாணம்
அஜித் -திரிஷா நடித்த
ஜி
பு.நே: 10.30, 2.30, 6.30, 9.30

நாகம்ஸ் சுன்னாகம்
6 ஆவது வெற்றிவாரமாக
தனுஷ், ஸ்ரீதேவி, கருணாஸ் நடித்த
தேவதையைக் கண்டேன்
பு.நே. 11.00, 3.00, 7.00, 10.00
அடுத்த வெளியீடு திருப்பாச்சி


## முக்கியமான கோவைகளை ஒப்படைக்கவும்

நான் சுகவீனம் அடைந்திருந்த வேளையில் என்னிடம் பெயர், விலாசம் குறிப்பிடாமல் நம்பிக்கையின் பேரில் வாங்கிச் சென்ற எனது முக்கியமான கோவைகள் இரண்டினையும் (Two Files) பெற்றுச் சென்ற பெண் நபர், அவற்றைத் தயவு செய்து உடன் ஒப்படைக்கவும். நான் கொழும்பு செல்லவேண்டி இருப்பதனால் காலதாமதமின்றி ஒப்படைப்பது நல்லது. நான் வீட்டில் இல்லையெனில் வீட்டின் கதவினூடாக உள்ளே செலுத்திவிடவும்.

வே.முருகையா,
198, கண்டி வீதி, யாழ்ப்பாணம்.
(1066)


Patrician Institutes
YOUTH EDUCATIONAL & TRAINING CENTRE
Reg: No: J/DS/F/BR/409/10
பற்றீசியன் தொழிற்பயிற்சி நிறுவனங்கள்

வாகன உரிமையாளர்கள் வாகன தகுதிச் சான்றிதழ் பெறுவது பற்றிய அறிவித்தல்
(FITNESS CERTIFICATE)

மேற்படி விடயம் தொடர்பாக எமது நிறுவனத்தினால் கிழமை நாட்களில் வாகன தகுதிச் சான்றிதழ் வாகனங்கள் பரிசோதிக் கப்பட்டு சான்றிதழ் வழங்கப்பட்டு கொண்டு இருக்கின்றன என்பதனை அனைத்து வாகன உரிமையாளருக்கும் அறியத் தருகின்றோம்.

வாகனங்களைக் கொண்டு வருபவர்கள் சிரமத்தை தவிர்ப்பதற்கு யாழ்.மாவட்ட வாகன பரிசோதகரினால் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களுக்கமைய சரிபார்த்து வாகனங்களைக் கொண்டு வருமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

அவை பின்வருமாறு:
1. வாகனத்தின் பதிவுப் பத்திரம். (புத்தகம்)
2. வாகனத்தின் ரயர்கள், முன் கண்ணாடி.
3. மின் விளக்குகள்.
4. மழை நீர் துடைப்பி. (பைவர்)
5. ஒலி எழுப்பி (கோர்ன்) மற்றும் சமிக்ஞைகள் (சிக்னல்கள்)
6. பிறேக் உடன் ஏனைய பொறிமுறைகள்.
போன்றவற்றைச் சரி பார்த்து வாகனத்தைக் கொண்டு வரவும்.

மேலதிக விபரங்களுக்கு :
பதிவாளர்:
59, சென்.பற்றிக்ஸ் வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.இல: 2226148
(C/3827)

# சேதமுற்ற வீடுகள் புனரமைக்க உலக வங்கி நிதி ஒதுக்கீடு!

(கொழும்பு)

வடக்கு - கிழக்கில் போரால் பாதிக்கப்பட்ட வீடுகளைப் புனரமைக்க, உலக வங்கி 716.5 கோடி ரூபாவை இலங்கை அரசாங்கத்துக்கு வழங்கியுள்ளது.

இதற்கான ஒப்பந்தம் நேற்று முன்தினம் நிதி அமைச்சில் கைச்சாத்திடப்பட்டது. நிதி அமைச்சின் செயலாளர் பி.பி.ஜெயசுந்தரா, உலக வங்கியின் வதிவிடப் பிரதிநிதி பீற்றர் ஹரோல்ட் ஆகியோர் இந்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டனர்.

இந்தத் திட்டத்தின் கீழ் போரால் பாதிக்கப்பட்ட சுமார் 45 ஆயிரம் வீடுகள் புனரமைக்கப்படவுள்ளன. இதற்காக இலங்கை அரசாங்கமும் 194 மில்லியன் ரூபாவை வழங்கியுள்ளது.

மாத வருமானம் 2500 இற்குக் குறைந்த ஒருவரின் வீடு - முழுமையாகப் பாதிக்கப்பட்டிருந்தால், அதனைப் புனரமைக்க 1 லட்சத்து 50 ஆயிரம் ரூபா வழங்கப்படவுள்ளது.

மேலும் சேதமடைந்த வீடுகளைப் புனரமைக்க 75 ஆயிரம் ரூபா வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## வலயக் கல்வி உத்தியோகத்தர்களுக்கு பரீட்சைக் கடமைக்குத் தடை

கல்வி வலய உத்தியோகத்தர்கள் பரீட்சைக் கடமைக்கு தடை கொண்டுவரப்படவுள்ளதாக பரீட்சை ஆணையாளர் மஹிந்த விஜயசிறி தெரிவித்தார். இது தொடர்பான சுற்று நிருபத்தில் -

வலயக் கல்வி அலுவலகம், கோட்டக் கல்வி அலுவலகம் ஆகியவற்றில் பணியாற்றும் உத்தியோகத்தர்கள் பரீட்சை நிலைய இணைப்பாளர்களாகவோ, மேற்பார்வையாளர்களாகவோ நியமிக்கப்படமாட்டாகள்.

அத்துடன் பரீட்சார்த்தி ஒருவரின் பெற்றோர் கல்வி உத்தியோகத்தராக இருப்பின் அவருக்கு பரீட்சைக் கடமை வழங்கப்படக்கூடாது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.





சுனாமியின் பின்னர் அநாதரவான நிலையில் மீட்கப்பட்டு - 9 பெற்றோர்களால் உரிமை கொண்டாடிய நான்கு மாதக் குழந்தை 'அபிலாஷ்' நேற்று பெற்றோரிடம் கையளிப்பதற்காக தாதி ஒருவரால் நீதிமன்றத்துக்கு கொண்டுவரப்படுவதையும், குழந்தையைப் பெற்றுக்கொண்ட தாய் நீதிமன்றத்திலிருந்து வெளியேறுவதை மேலுள்ள படங்களிலும், குழந்தை மீளக்கிடைத்த மகிழ்ச்சியில் பெற்றோரை கீழுள்ள படங்களிலும் காணலாம்.

# தமிழர்கள் தமது தேசியக் கொடியை ஏற்றுவதில் எந்தவித தவறுமில்லை!

## மன்னார் ஆயர் இராஜப்பு ஜோசப்

(மன்னார்)

தமிழ் மக்கள் தமது தேசியக் கொடியை ஏற்றுவதில் எந்தவித தவறுமில்லை. தமிழ்மக்களின் தேசியக்கொடி விடுதலைப் புலிகளினுடையதல்ல. அத்துடன், தமிழர்கள் தமது தேசியக்கொடியை ஏற்றுவது சமாதானத்துக் கெதிராகவல்ல என, மன்னார் மாவட்ட ஆயர் இராயப்பு யோசப் தெரிவிததார்.

வெலிக்கந்தவில் இடம்பெற்ற படுகொலை - மன்னார் அரசியற்துறை அலுவலகம் மீதான கைக்குண்டு வீச்சு மற்றும் பாடசாலை மாணவரொருவரைப் பொலிஸார் பாலியல் வல்லுறவுக்குட்படுத்தியமை போன்ற சம்பவங்களைக் கண்டித்து, நேற்றுமுன்தினம் மன்னாரில் இடம்பெற்ற கண்டனப் பேரணியில் கலந்துகொண்டு பேசுகையிலேயே ஆயர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில் -

தமிழர்கள் தமது தேசியக் கொடியை ஏற்றுவதை எதிர்க்கும் பலர் - அண்மையில் இடம்பெற்ற பல கொலைகளைக் கண்டிக்காமல் மௌனமாக இருந்துள்ளனர்.

சுனாமி அனர்த்தம் ஏற்பட்டு மக்கள் பெரும் அழிவுகளைச் சந்தித்துள்ள நிலையில், அண்மைய கொலைச் சம்பவங்கள் துயரமளிப்பனவாகவுள்ளன. இந்தக் கொலைகள் மீண்டுமொரு போருக்கே வழிவகுக்கும்.

அண்மைக்காலமாகப் பல கொலைச் சம்பவங்கள் இடம்பெற்று வந்தபோதும், விடுதலைப் புலிகள் பொறுமை காத்திருப்பதையிட்டு நான் அவர்களைப் பாராட்டுகின்றேன்.

இத்தகைய கொலைச் செயல்களைச் செய்வதன்மூலம், சிலர் சமாதான முயற்சியைப் பினனோக்கி இழுத்துச் செல்ல முற்படுகின்றனர். தமிழ்ப் பொதுமக்கள் - விடுதலைப் புலிகளின் கொடியை தமது



பிரதேசங்களில் மாவீரர் தினத்தன்று ஏற்றுகின்றனர்.

அமைதியான முறையில் எந்த வி[illegible] ஆயுதங்களுமின்றி, நிராயுதபாணிகளான மக்களின் இந்தச் செயலுக்கு, கனரக ஆயுதங்களுடன் அவ்விடம் செல்லும் படையினர் - அங்கு நிராயுதபாணிகளாக நிற்கும் பொது மக்கள் மீது கண்மூடித்தனமான தாக்குதல்களை மேற்கொள்கின்றனர் என்றும் ஆயர் மேலும் தெரிவித்தார்.

# ஜனாதிபதி சந்திரிகா தன்னிடம் விளக்கம் கோரவில்லையாம்

## அனுரா தெரிவிப்பு

ஜனாதிபதி சந்திரிகா தன்னிடம் விளக்கம் எதுவும் கேட்கவில்லை என, அமைச்சர் அனுராபண்டாரநாயக்க தெரிவித்துள்ளார்.

கண்டி தலதாமாளிகைக்குச் சென்ற அமைச்சர் அனுரா பண்டாரநாயக்க - தியவதனநிலமே நிரஞ்சன் விஜயரட்ணவைச் சந்தித்து உரையாடியபின், ஊடகவியலாளர்களிடம் கருத்துத் தெரிவிக்கும் போது, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

ஜனாதிபதி தன்னிடம் சுனாமி கடற்கொந்தளிப்பு தொடர்பாக, தான் தெரிவித்த கருத்துக்கள் தொடர்பிலோ, தனது அமெரிக்க சுற்றுலா தொடர்பிலோ தன்னிடம் விளக்கம் கோரவில்லை.

ஊடகங்கள் பொறுப்புடன் செயற்படவேண்டும். சுனாமி கடற்கொந்தளிப்புச் செய்திகளை வெளியிட்டு முடித்துள்ள ஊடகங்கள் - சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் உட்பூசல்கள் குறித்து செய்திகள் வெளியிடுவதில் ஆர்வம் காட்டுவதாகவும் அவர் குறிப்பிட்டார். (01)

# ஐ.நா. செயலரின் கண்டனத்துக்கு எதிராக பிக்குகள் முன்னணி இன்று சத்தியாக்கிரகம்

மட்டு. அம்பாறை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் கௌசல்யன் உட்பட ஆறுபேர் கொல்லப்பட்ட சம்பவத்துக்கு, ஐக்கிய நாடுகள் சபை கண்டனம் தெரிவித்ததைக் கண்டித்து, தேசிய பிக்குகள் முன்னணியினர் இன்று சத்தியாக்கிரகப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர்.

இந்தச் சத்தியாக்கிரகப் போராட்டம் இன்று மாலை 3 மணிக்கு ஐக்கிய நாடுகள் சபையின் கொழும்பு தலைமையகத்துக்கு முன்னால் நடைபெறவுள்ளது.

இந்தச் சத்தியாக்கிரகப் போராட்டத்தில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட பிக்குகள் கலந்துகொண்டு எதிர்ப்புத் தெரிவிக்கவுள்ளனர்.

இது தொடர்பாக கடந்த திங்கட்கிழமை பிக்குகள் முன்னணி நடத்திய ஊடகவியலாளர் மாநாட்டில் -

கௌசல்யன் உட்பட 6 பேரின் படுகொலைகள் தொடர்பான ஐக்கிய நாடுகளின் கண்டன அறிக்கை- இலங்கையின் இறைமையை, ஆட்புல ஒருமைப்பாட்டைப் பாதிக்கும், நாட்டைப் பிளவுபடுத்தும் இலக்குடன் செயற்படும் புலிகள் இயக்கத்தின் உறுப்பினர்களின் படுகொலைக்கு கண்டனம் தெரிவித்துள்ளமை, புலிகளுக்குச் சர்வதேச ரீதியில் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொடுப்பதற்கான உபாயமாகவே கருதப்படவேண்டியுள்ளது. இதன் மூலம் புலிகளின் ஆத்மபலம் அதிகரிக்கும்.

நாடுகளின் இறைமையை, ஆட்புல ஒருமைப்பாட்டை, ஐக்கியத்தை வலியுறுத்தி - ஏற்று அங்கீகரிக்கும் ஐ.நா. சபை நாட்டைப் பிளவுபடுத்தி, ஏனைய பிராந்திய நாடுகளை அச்சுறுத்தும் பிரிவினைவாத இயக்கத்துக்குள் நேர்ந்த படுகொலைக்கு இவ்வாறு கண்டனம் தெரிவித்திருப்பது கண்டிக்கத்தக்கது எனத் தெரிவிக்கப்பட்டது.

## வெண்புறா நிறுவன கிளை அலுவலகம் திறப்பு

சுனாமி கடற்கொந்தளிப்பால் பாதிக்கப்பட்ட மக்களின் உடனடித் தேவைகளைப் பூர்த்திசெய்யும் வகையில், வல்வெட்டித்துறை சந்திக்கு அண்மையில் வெண்புறா நிறுவனம் கிளைக் காரியாலயமொன்றைத் திறந்துள்ளது.

இதேவேளை, தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் ஆதரவுடன் வெண்புறா நிறுவனம் பொலிகண்டியிலும் சேவையாற்றி வந்தமை குறிப்பிடத்தக்கது.

# உண்டியல் மோசடி செய்ய முயன்ற இளைஞர் கைது!

கனடாவிலிருந்து உண்டியலில் பணம் அனுப்பியதாகத் தெரிவித்து, போலியாக உள்ளூரில் உள்ள உண்டியல் முகவர் ஒருவருக்கு தொலைநகல் அனுப்பி -5 லட்சத்து 35 ஆயிரம் ரூபா பணத்தை மோசடி செய்ய முயன்றதாகக் குற்றம் சாட்டப்பட்ட இரு இளைஞர்களை, எதிர்வரும் 22 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு வவுனியா மாவட்ட நீதிவான் எம்.இளஞ்செழியன் உத்தரவிட்டார்.

இது தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது -

கனடாவில் உள்ள ஒருவர் 5 லட்சத்து 35 ஆயிரம் ரூபா பணத்தை வவுனியாவில் உள்ள ஒருவருக்கு அனுப்பியுள்ளதாகத் தெரிவித்து, அவருடைய பெயர் மற்றும் தேசிய அடை[illegible]பாள அட்டை இலக்கம் ஆகிய வி[illegible]ங்களை உள்ளடக்கிய தொலைநகல் ஒன்றை வவுனியாவிலிருந்தே, வவுனியாவில் உள்ள உண்டியல் முகவர் ஒருவருக்கு அனுப்பிவிட்டு, கனடாவிலிருந்து தமக்குப் பணம் அனுப்பப்பட்டுள்ளதாகத் தெரிவித்து, அதனைத் தருமாறு இளைஞர்கள் கோரினர். அவர்கள் மீது சந்தேகம் கொண்ட உண்டியல் முகவர் கொடுத்த தகவலையடுத்து, வவுனியாவில் உள்ள மோசடிப் பிரிவுப் பொலிஸார் இளைஞர்கள் இருவரையும் கைது செய்தனர்.

கனடாவிலிருந்து பணம் அனுப்பப்பட்டதாகவோ அல்லது பணம் அனுப்பிவைக்கப் படுவதாகவோ தகவல் எதுவும் தமக்குக் கிடைக்காத நிலையில், தொலைநகல் தகவல் மட்டும் வந்தவுடனேயே பணத்தைப் பெற்றுச் செல்வதற்காக வந்த இளைஞர்கள் மீது தமக்கு சந்தேகம் எழுந்ததனாலேயேதான் பொலிஸாருக்குத் தகவல் கொடுத்ததாகக் குறிப்பிட்ட உண்டியல் முகவர் - பொலிஸாருக்குத் தெரிவித்துள்ளார்.

இவர்களை விசாரணை செய்த போது கனடாவிலிருந்து அனுப்பியதைப் போன்று போலியாக வவுனியாவிலிருந்தே தொலைநகல் அனுப்பி வைக்கப்பட்ட விடயம் வெளிச்சத்துக்கு வந்துள்ளதாகவும் பொலிஸார் நீதிமன்றத்தில் சமர்ப்பித்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளனர்.

சந்தேக நபர்களை விசேட பாதுகாப்பில் வைக்குமாறு அனுராதபுரத்தில் உள்ள சிறைச்சாலை அத்தியட்சகருக்கு உத்தரவிட்ட வவுனியா மாவட்ட நீதிபதி - கடந்த வாரம் இடம்பெற்ற 50 ஆயிரம் ரூபா பண மோசடி சம்பவத்துடன் இவர்களுக்கு சம்பந்தம் உள்ளதா என்பதைக் கண்டறிவதற்கான விசாரணைகளை மேற்கொள்ளுமாறும் பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளார்.

# மலையகத்தில் வரட்சி நீர்மின் உற்பத்தி பாதிப்பு

(கொழும்பு)

மலையகத்தின் மத்திய பகுதியில் ஏற்பட்டுள்ள காலநிலை வரட்சி காரணமாக, காஸல்றீ நீர்த்தேக்கத்தை அடிப்படையாகக் கொண்டு மின்சாரத்தை உற்பத்தி செய்யும் மூன்று நீர்மின் உற்பத்தி நிலையங்களின் மின்சார உற்பத்திப் பணிகள் தடைப்பட்டுள்ளன.

வறட்சியால் காஸல்றீ நீர்த்தேக்கத்தின் நீர்மட்டம் 44 அடிகள் குறைந்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதற்கிடையே நீர்த்தேக்கத்தில் களிமண் அடித்துச் செல்லப்படுவதால், நீர்த்தேக்கம் மூடப்படும் அபாயம் ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நீர்த்தேக்கத்தைப் பயன்படுத்தி மின் உற்பத்தி செய்யும் விமலசுரேந்திர, லக்சபான, பொல்பிட்டிய ஆகிய மின் உற்பத்தி நிலையங்களின் பணிகள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளன.

வரட்சிக் காலநிலை காரணமாக காஸல்றீ நீர்த்தேக்கத்தின் நீர்மட்டம் முதற்தடவையாகக் குறைந்திருப்பது குறிப்பிடத்தக்கது. (01)

## போகொல்லகமவை ஐ.தே.க. நீக்கியது சட்டவிரோதமானது என்று உயர் நீதிமன்றம் தீர்ப்பு!

அமைச்சர் ரோகித போகொல்லகமவை ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து நீக்குவதற்கு, அந்தக் கட்சி எடுத்த முடிவு சட்டவிரோதமானது என்று உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

நீதியரசர்கள் நிகால் ஜயசிங்க, நிமால் டி திஸநாயக்க, ராஜா பெர்னாண்டோ ஆகியோரைக் கொண்ட குழு - ஐக்கிய தேசியக் கட்சி எடுத்த தீர்மானத்துக்குச் சட்ட வலு கிடையாது என்று ஏகமனதாகத் தீர்ப்பளித்துள்ளது.

இந்த வழக்கில் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, கட்சியின் தவிசாளர் மலிக் சமரவிக்கிரம, பொதுச்செயலாளர் என்.வி.கே. வேரகொட, நாடாளுமன்ற பொதுச் செயலாளர் நாயகம், தேர்தல் ஆணையாளர் ஆகியோர் பிரதிவாதிகளாகவும் குறிப்பிடப்பட்டிருந்தனர். (01)

### சுனாமி நிவாரணத்துக்கான

# காட்சி உதைபந்தாட்ட போட்டி; ரொனால்டினோ அணி வெற்றி!



(பார்சிலோனா)

இத்தாலியின் பார்சிலோனா நகரில் நேற்று முன்தினம் நடைபெற்ற காட்சி உதைபந்தாட்டப் போட்டியில் - ரொனால்டினோ லெவன் அணி 6-3 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

சர்வதேச உதைபந்தாட்ட சம்மேளனம் நடத்திய இந்தப் போட்டியில் -

உலகின் தலைசிறந்த வீரர்களான ஷீடேன் ஹென்றி (பிரான்ஸ்), டேவிட் பெக்காம் (இங்கிலாந்து), மால்டினி டெல் பியரோ (இத்தாலி), நகட்டா (ஜப்பான்) ஆகியோர் கலந்துகொண்டனர். உலகக் கோப்பை போட்டியில் கதாநாயகனாக ஜொலித்த ரொனால்டோ இதில் பங்கேற்கவில்லை.

ஒரு அணிக்கு பிரேசிலைச் சேர்ந்த ரொனால்டினோ கப்டனாகப் பணியாற்றினார். மற்றொரு அணிக்கு உக்ரைனைச் சேர்ந்த ஆன்ட்ரி செவ்சென்கோ கப்டனாக இருந்தார்.

இதில் ரொனால்டினோ லெவன் 6-3 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

ரொனால்டினோ அணியில் அவரும் கமரூனைச் சேர்ந்த எடோவும் சிறப்பாக விளையாடி



3 கோல்களை அடித்தனர். ஆன்ட்ரி அணியில் டெல்பியரோ ஜோலா, ஹென்றி கேமரா ஆகியோர் கோல் அடித்தனர்.

இந்த காட்சி கால்பந்து போட்டியை 40 ஆயிரம் பேர் கண்டுகளித்தனர்.

### மீண்டும் வந்தார் கிம் கிலிஸ்டர்ஸ்



பெல்ஜியம் நாட்டைச் சேர்ந்த முன்னாள் முதன்நிலை ரெனிஸ் வீராங்கனை கிம் கிலிஸ்டர்ஸ் கடந்த ஒக்ரோபர் மாதம் நடந்த போட்டியின்போது காயமடைந்தார். இதனால் அவர் விளையாடாமல் இருந்தார். 4 மாத இடைவெளிக்குப் பிறகு அவர் மீண்டும் களம் திரும்பியுள்ளார்.

தனது நாட்டில் நடந்த அன்ட்வொப் ஓபன் போட்டியில் அவர் பங்கேற்றார். கிலிஸ்டர்ஸ் முதல் சுற்றில் 6-2, 6-3 என்ற நேர் செட் கணக்கில் குரோஷியாவைச் சேர்ந்த ஜெலீனாவை தோற்கடித்தார்.

### அவுஸ்ரேலியாவுக்கு எதிரான

## ஒரு நாள் தொடருக்கான நியூஸிலாந்து அணி!

(சிட்னி)

அவுஸ்ரேலியாவுக்கு எதிரான ஒருநாள் கிரிக்கெட் தொடரில் பங்கேற்கும் நியூஸிலாந்து அணியே டுவெண்டி - டுவெண்டி போட்டியிலும் பங்கேற்கவுள்ளது.

அவுஸ்ரேலிய அணியுடன் இந்த வார இறுதியில் அப்போட்டி நடைபெறும். 5 ஆட்டங்கள் கொண்ட ஒருநாள் தொடரில் முதல் இரண்டு ஆட்டங்களுக்காக அறிவிக்கப்பட்டுள்ள நியூஸிலாந்து அணியில் வேகப்பந்து வீச்சாளர் கைல் மில்ஸை சேர்த்துள்ளார் அணியின் பயிற்சியாளர் ஜோன் பிரெஸ்வெல்.

மில்ஸ் உடற்தகுதி சோதனையில் தேர்வு பெற்றதையடுத்து இம்முடிவை அவர் மேற்கொண்டுள்ளார். காயத்தால் அவதிப்பட்டு வந்த ஜேகப் வில்சன், டானியல் விற்ரோறி, ஸ்காட் ஸ்ரரஸ் ஆகியோரும் அணியில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

நியூஸிலாந்து அணிவிபரம் - ஸ்டீபன் பிளமிங் (கப்டன்), நதன் அஸ்ரில், மத்தியூ சிங்கிளயர், ஸ்கொட் ஸ்ரரஸ், ஹமிஷ் மார்சல், கிரெய்ல் மக்மிலன், கிறிஸ் கெய்ன்ஸ், பிரெண்டன் மக்கலம், டானியல் விற்ரோறி, அன்ரே அடம்ஸ், நெப்வில்சன், கைல் மில்ஸ், ரபி.

# தேர்வுக்கொள்கையை மாற்றுவதால் அணி முன்னேற்றமடைய முடியாது!

### தென்னாபிரிக்க அணி குறித்து ரொட்ஸ்



(டெல்கி)

முன்னாள் அவுஸ்ரேலிய அணிக் கப்டன் ஸ்டீவ் வோ, மேற்கிந்திய தீவுகள் அணிக்கப்டன் பிரைன் லாரா ஆகியோரே பந்தை வலுவுடன் அடிப்பதில் முன்னிலை வீரர்கள் என தென்னாபிரிக்க அணியின் முன்னாள் வீரர் ஜொன் டி ரொட்ஸ் கருத்துத் தெரிவித்துள்ளார்

தென்னாபிரிக்காவின் சுற்றுலா மேம்பாட்டுக்காக இந்தியாவுக்கு விஜயம் செய்துள்ள அவர் செய்தியாளர்களிடம் பேசியபோது மேற்கண்ட கருத்தை தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது -


லாரா, வோ ஆகியோர் அடித்த பந்துகளை தடுக்க முற்பட்டு 2 முறை கையை உடைத்துக் கொண்டேன். நான் எதிர்கொண்ட வீரர்களிலேயே அவர்கள் அடிக்கும் பந்துகள்தான் வலுவுடன்வரும். இருவரும் சிறந்த துடுப்பாட்டக்காரர்கள் என்பதில் சந்தேகமில்லை. கடினமான மட்டைகளைப் பயன்படுத்தும் இந்தியாவின் சச்சின் டெண்டுல்கர் வலுவாக பந்தை அடிப்பதில் மற்றொரு முக்கியமான வீரர். நேரம் பார்த்து பந்தை விளாசுவதில் சச்சின் நிகரற்றவர் என்றார் அவர்.

தென்னாபிரிக்க வீரர்கள் வேகப்பந்து வீச்சுக்கேற்ற மைதானங்களிலேயே பயிற்சி மேற்கொள்வதால், அம்மாதிரி பந்து வீசுபவர்களை எளிதாக எதிர்கொள்ளும் தன்மையைப் பெற்றுள்ளனர். ஆதலால் அனில் கும்ளே, ஷேன் வோன், முத்தையா முரளிதரன் ஆகியோரது சுழல்பந்து வீச்சை சமாளிக்க பெரும் பாடுபடுகின்றனர்.

தென்னாபிரிக்காவைப் பொறுத்தவரை கிரிக்கெட் மேம்பாடே முக்கியம். அவுஸ்ரேலியாவைப் போல பிரகாசிக்கவேண்டும் என்ற உயர்ந்த நோக்கம் கிடையாது. உலகில் தலை சிறந்த அணியாக தென்னாபிரிக்கா திகழவேண்டும் என்றால், அணியின் தேர்வுக் கொள்கையை மாற்றுவதால் மட்டுமே அணி முன்னேற்றம் பெறமுடியாது.

இங்கிலாந்துக்கு தற்போது இடம்பெயர்ந்துள்ள லான்ஸ் குளுஸ்னர், டேவியன் பீட்டர்சன் ஆகியோர் தென்னாபிரிக்க அணித் தேர்வாளர்களின் அன்பை பெறாதவர்கள். ஆதலால்தான் சிறப்பாக ஆடியும் அவர்களால் அணியில் இடம் பெறமுடியவில்லை என்று ரொட்ஸ் தெரிவித்தார்.

# சொஹைப் அக்தர் மீது இன்று விசாரணை!



அடுத்தடுத்த சர்ச்சையில் சிக்கிய பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் வேகப்பந்து வீச்சாளர் அக்தரிடம் விசாரணை நடத்த அந்நாட்டு கிரிக்கெட் சபை முடிவுசெய்துள்ளது.

பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் நம்பிக்கை நாயகனான அக்தர் கடந்த ஆண்டு இந்திய அணி பாகிஸ்தான் சென்றபோது சரியான முறையில் தனக்கு ஒத்துழைப்பு கொடுக்கவில்லை என்று கப்டன் இன்சமாம் குற்றம் சாட்டியிருந்தார். இதன் காரணமாகத்தான் உள்ளூர் போட்டியில் பாகிஸ்தான் தோல்வி கண்டது என்று இன்சமாம் பகிரங்கமாகக் குறை கூறினார்.

இதுதொடர்பாக அக்தர் உள்ளிட்ட சில வீரர்களிடம் பாகிஸ்தான் கிரிக்கெட் சபை விசாரணை நடத்தியது. விசாரணை முடிவில் அக்தர் மீது நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை. மாறாக இனி இதுபோன்ற சர்ச்சையில் சிக்கினால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று பாகிஸ்தான் கிரிக்கெட் சபை அக்தரை எச்சரித்தது.

அவுஸ்ரேலியாவுக்கு எதிரான டெஸ்ட் போட்டியின்போது அக்தர் இரவு விடுதிகளில் அதிக நேரம் செலவிட்டார். இதன் காரணமாகத்தான் அவரால் சரியான முறையில் சாதிக்கமுடியவில்லை என்று குற்றம் சாட்டப்பட்டது. இதை நிரூபிக்கும் வகையில் , இரவு விடுதியில் அக்தர் இருப்பது போன்ற புகைப்படங்கள் இணையத்தளத்தில் வெளியிடப்பட்டன. அது மட்டுமன்றி உரிய முன்னனுமதி எதையும் பெறாமல் தன்னிச்சையாக அக்தர் பத்திரிகைகளுக்கு பேட்டி அளித்தார் என்றும் அவர் மீது குற்றம் சுமத்தப்பட்டது.

இந்தக் குற்றச்சாட்டுகள் தொடர்பாக அக்தரிடம் இன்று விசாரணை நடக்கவுள்ளது. 3 பேர் கொண்ட குழு முன்பு ஆஜராகி அக்தர் சாட்சியம் அளிக்கவுள்ளார். இந்த விசாரணை மட்டுமன்றி தோள்பட்டை காயம் காரணமாக அவதிப்பட்டு வரும் அக்தரிடம் உடல் தகுதி சோதனையும் நடத்தப்படவுள்ளது. இந்த சோதனையில் தேறினால்தான் அக்தர் பாகிஸ்தான் அணியில் சேர்த்துக் கொள்ளப்படுவார் என்ற சிக்கலான நிலை உருவாகியுள்ளது.

## விளையாட்டு

### சுனாமி அனர்த்தத்தின் விளைவு

# காலி கிரிக்கெட் மைதானம் புதிய இடத்துக்கு மாற்றம்!

(கொழும்பு)

சுனாமி தாக்குதலுக்குப் பின் காலி கிரிக்கெட் மைதானம் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளதால் அதன் அருகிலேயே வேறு மைதானத்தை அமைக்கும் பணியில் கிரிக்கெட் நிர்வாகிகள் தீவிரமாக இறங்கியுள்ளனர்.

காலியில் 1998 ஜுன் முதல் டெஸ்ட் போட்டி நடைபெற்றது. அன்றுமுதல் நடைபெற்ற 11 போட்டிகளில் 7 இல் வென்று, 2 போட்டிகளில் சமன்செய்தும் ஒன்றில் தோல்வி கண்டும் வந்தது இலங்கை அணி.

காலி மைதானம் குறித்து அதன் மேற்பார்வையாளர் ஜயநந்த வர்ணவீர கூறியதாவது-

சுனாமியால் சேதமடைந்த காலியைப் புதுப்பிக்க அரசிடம் இருந்து அனுமதிவரவில்லை. மைதானத்துக்கு அருகே போத்துக்கேயரால் கட்டப்பட்ட சரித்திரச் சிறப்புமிக்க கோட்டை உள்ளது இதற்கு எவ்வித சேதமும் ஏற்பட்டுவிடக் கூடாது என்பதற்காகவே மைதானத்தின் புதிய கட்டுமானப் பணிகளுக்கு அரசு அனுமதிக்கவில்லை.

இருப்பினும் காலி மைதானம் பிரீமியர் லீக் போட்டிகளுக்கு பயன்படுத்தப்படும். டெஸ்ட் போட்டிகளுக்கு ஏற்றதாக இருக்காது என்றார். சுனாமி தாக்குதலின் போது மைதானத்தின் 10 மீற்றர் உயரத்துக்கு தண்ணீர் இருந்தது.

அரைஅடி முதல் 1 அடிவரை மைதானத்தில் படிந்துள்ள மண்ணை அகற்ற ஒரு ஆண்டு பிடிக்கலாம். அதன் பிறகு கிரிக்கெட் விளையாடுவதற்கு ஏற்றவாறு மைதானத்தைச் சீரமைக்க வேண்டும்.

மைதானத்தைப் புதுப்பிக்க சுமார் 90 கோடி ரூபா செலவாகலாம். காலி மைதானமே எனது வாழ்க்கையாக இருந்தது. இப்போது வாழ்க்கையின் ஒரு பகுதியை சுனாமி அடித்துச் சென்றுவிட்டது என்றார்.

புதிய கட்டுமானப் பணிகளின் மீது விதிக்கப்பட்டுள்ள சட்டவிதிகள் காரணமாக சர்வதேச பாதுகாப்பு தரமுள்ள மைதானத்தை அமைக்க இயலாத நிலை ஏற்பட்டுள்ளது என்றார் இலங்கை கிரிக்கெட் சிறப்பு பிரதிநிதி திலங்க சுமதிபால.

கிரிக்கெட் ரசிகர்கள் மற்றும் ஆர்வலர்கள் அதிகமுள்ள இலங்கையின் தெற்கு மாகாணத்தில் உள்ள காலியில் டெஸ்ட் போட்டி மைதானம் இருக்கும்படி பார்த்துக் கொள்வோம். தற்போதுள்ள மைதானத்துக்கு அருகிலேயே புதிய மைதானம் கட்ட முயற்சிப்போம் என்று கிரிக்கெட் நிர்வாகிகள் நம்பிக்கையுடன் கூறுகின்றனர்.

### கரப்பந்தாட்ட இறுதிப்போட்டி

(தெல்லிப்பளை)

தெல்லிப்பளை கல்விக்கோட்ட பாடசாலைகளுக்கிடையிலான கரப்பந்தாட்ட இறுதிச்சுற்றுப் போட்டி இன்று பி.ப. 1 மணிக்கு மகாஜனக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளதாக கோட்டக் கல்வி அதிகாரி கைலைநாதன் தெரிவித்துள்ளார். (72)

# பார்சல் அனுப்புவதற்கு அலையும் சாவகச்சேரிப் பிரதேச மக்கள் !

(சாவகச்சேரி)

சாவகச்சேரி அஞ்சலகத்தில் வெளியூர்களுக்கான பார்சல்கள் அனுப்ப முடியாதிருப்பதால், தாம் பெரும் கஷ்ரங்களை எதிர்நோக்கி வருவதாக அந்தப் பகுதி மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

யாழ்.குடாநாட்டில் ஏனைய அஞ்சல் அலுவலகங்களின் ஊடாக வெளிமாவட்டங்களுக்கும், வெளி நாடுகளுக்கும் அனுப்புவதற்கான பார்சல்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன.

எனினும், சாவகச்சேரி அஞ்சல் அலுவலகத்தில் பார்சல்கள் ஏற்றுக் கொள்ளப்படுவதில்லை. இதனால் வேறு பிரதேசங்களுக்குச் சென்றே பார்சல்களை அனுப்ப வேண்டிய அவலநிலை ஏற்பட்டுள்ளதாக, அந்தப் பகுதி மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

அத்துடன், ஏனைய அஞ்சல் அலுவலகங்களில் பொதுமக்கள் தொலைபேசி சேவைகளைப் பெறுவதற்கான வசதிகள் இருக்கின்ற போதிலும், சாவகச்சேரி அஞ்சல் அலுவலகத்தில் தொலைபேசிச் சேவைகளைப் பெறமுடியாதுள்ளது என்றும், பொதுமக்களின் பாவனைக்கென வழங்கப்பட்ட தொலைபேசிகள் அலுவலகத்தின் பாவனைக்குப் பயன்படுத்தப்பட்டு வருவதாகவும் கூறப்படுகிறது.

இந்த அஞ்சல் அலுவலகத்துக்குப் பார்சல்களை அனுப்புவதற்கும், தொலைபேசி சேவைகளைப் பெறுவதற்கும் வசதிகளை ஏற்படுத்தித் தருமாறு, அந்தப் பகுதி மக்கள் அஞ்சல் அத்தியட்சகரிடம் கோரிக்கை விடுத்துள்ளதாகத் தெரிய வருகிறது.

## கற்றல் உபகரணங்கள் வழங்கல்

சுனாமி கடல் அனர்த்தத்தால் வல்வெட்டித்துறைப் பகுதியில் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் சிறுவர் பாதுகாப்பு நிறுவனத்தின் உதவியுடன், வெண்புறா செயற்கை உறுப்பு தொழில் நுட்ப நிறுவனத்தால் கடந்த ஞாயிற்றுக்கிழமையன்று வல்வெட்டித்துறையிலுள்ள கிளைச் செயலகத்தில் வைத்து வழங்கப்பட்டன.

## வருடாந்த மஹோற்சவம்

நெடுந்தீவு மேற்கு கரமத்தை கந்தசுவாமியார் ஆலய வருடாந்த மஹோற்சவம் - நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை காலை 11.00 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

நாளை மறுதினம் சனிக்கிழமை 108 சங்காபிஷேகமும், 23 ஆம் திகதி வேட்டைத் திருவிழாவும், 24 ஆம் திகதி வியாழக்கிழமை இரதோற்சவம் மற்றும் தீர்த்தோற்சவம் என்பனவும், மறுநாள் பூங்காவனத் திருவிழாவும் இடம்பெறும்.

தினமும் காலை 9.30 மணிக்கு கிரியைகள் ஆரம்பமாகி, இரவு உற்சவம் 12.00 மணிவரை இடம் பெறும் என்பது குறிப்பிடத்தக்கது.

## தற்காலிக வீட்டுத்திட்டம்

யாழ். மாவட்டத்தில் சுனாமி கடற்கொந்தளிப்பால் இருப்பிடங்களை முற்றாக இழந்தவர்களில் 50 குடும்பங்களுக்கு தற்காலிகமான வீடுகள் அமைக்கும் பணியை வெண்புறா செயற்கை உறுப்பு தொழிநுட்ப நிறுவனம் -வல்வெட்டித்துறைப் பகுதியில் ஆரம்பித்துள்ளது.

சிறுவர் பாதுகாப்பு - நிறுவனத்தின் உதவியுடன் இந்தப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

## ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம்

நெடுந்தீவு பிரதேச செயலக மாதாந்த அபிவிருத்தி ஒருங்கிணைப்புப் குழுக்கூட்டம் எதிர்வரும் 24 ஆம் திகதி வியாழக்கிழமைக்கு பிற்போடப்பட்டுள்ளது.

இன்று முற்பகல் 11.30 மணிக்கு இடம்பெறும் என, ஏற்கெனவே உரிய திணைக்களங்களுக்கு அழைபபுகள் அனுப்பப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (113)

# யாழ். கூட்டுறவாளர் மேம்பாட்டு செயலமர்வு

யாழ். மாவட்டத்திலுள்ள கூட்டுறவுச் சங்கங்களின் வினைத்திறனை மேம்படுத்துவதற்கான செயலமர்வு - எதிர்வரும் சனி, ஞாயிறு தினங்களில் வீரசிங்கம் மண்டபத்தில் காலை 10 மணிக்கு ஆரம்பமாகும்.

இந்தச் செயலமர்வில் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் தலைவர்கள், பொது முகாமையாளர்கள், கணக்காளர்கள், வர்த்தக முகாமையாளர்கள், உள்ளகக் கணக்காளர் ஆகியோரும் - இரண்டாம் கட்டமாக மாவட்ட கூட்டுறவுச் சங்கங்களின் தலைவர்கள், பொது முகாமையாளர்கள் ஆகியோருக்கும் நடைபெறவுள்ளது.

இந்தச் செயலமர்வில் பங்குபற்றுவோர் பெயர் விபரங்களை நாளை நண்பகலுக்கு முன்னர் அறிவிக்கும்படி கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

இந்தச் செயலமர்வில் தென்னிலங்கையில் இருந்தும் பல விரிவுரையாளர்கள் பங்குபற்றவுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (21)

# வாள்வெட்டுக்கு இலக்காகி குடும்பஸ்தர் படுகாயம்!

(அச்செழு)

தோட்டத்தில் வேலை செய்து கொண்டிருந்தவேளை, வாள்வெட்டுக்கு இலக்காகிய குடும்பஸ்தர் ஒருவர் படுகாயமடைந்து, யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.


இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் முற்பகல் 11 மணியளவில் அச்செழு வடக்கில் இடம்பெற்றது.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது -

இருவருக்கிடையே நீண்ட காலமாக நிலவிவந்த காணித் தகராறே இந்தச் சம்பவத்துக்குக் காரணம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதில் அச்செழு வடக்கு - நீர்வேலியைச் சேர்ந்த சிவகுமார் (வயது 45) என்பவரே வாள் வெட்டுக்கு இலக்காகி, யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

# யாழ்ப்பாணம் சதொச ஊழியர்கள் வேலை நிறுத்தப் போராட்டத்தில்!



(யாழ்ப்பாணம்)

ஐந்து அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து, நேற்றுக் காலை 10 மணிமுதல் 12 மணிவரை சதொச ஊழியர்கள் வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

சம்பள உயர்வு வழங்குதல், ஐக்கிய தேசியக் கட்சியால் விற்கப்பட்ட சதொசவை மூடுவதற்கு இடமளிக்காமல் அரசாங்கம் பொறுப்பேற்க வேண்டும்.

சதொச மொத்த விற்பனை நிலையத்தால் வழங்கப்படும் சேவைகள் அனைத்து ஊழியர்களுக்கும் வழங்குதல் போன்ற கோரிக்கைகளை முன்வைத்தே இந்த வேலை நிறுத்தப் போராட்டம் நடத்தப்பட்டது.

## இல்ல மெய்வன்மைப் போட்டி

ஆனைப்பந்தி மெதடிஸ்த மிஷன் வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி - நாளை பிற்பகல் 1.45 மணிக்கு அதிபர் எஸ்.சோமேஸ்வரபிள்ளை தலைமையில் நடைபெறவுள்ளது.

இதில் முதன்மை விருந்தினராக நல்லூர் கோட்டக் கல்விப் பணிப்பாளர் திருமதி எஸ்.காங்கேயனும், சிறப்பு விருந்தினர்களாக - யாழ். வலய செயற்திட்ட அதிகாரி எஸ்.சிவானந்தனும், ஓய்வுபெற்ற அதிபர் திருமதி ப.அன்ரனியும் கலந்துகொள்ளவுள்ளனர்.

## ஏகாதசிவிரத பூசை

(கொக்குவில்)

அளவெட்டி தெற்கு நாகேஸ்வரம் சிறீநாகவரத நாராயணர் ஆலயத்தில் - நாளை மறுதினம் சனிக்கிழமை ஏகாதசி விரத பூசை மிகச் சிறப்பாக நடைபெறவுள்ளது. (206)

# வலி.வடக்கு பிரதேசசெயலக வருடாந்த விளையாட்டு விழா

(வலிகாமம்)

வலிகாமம் வடக்கு பிரதேச செயலகம் நடத்தும் வருடாந்த விளையட்டுப் போட்டி - எதிர்வரும் 20 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு மல்லாகம் ஸ்ரீ பாஸ்கரன் விளையாட்டரங்கில் நடைபெறவுள்ளது.

வலி.வடக்கு பிரதேச செயலர் சு.முரளிதரன் தலைமையில் நடைபெறும் இந்தப் போட்டிகளுக்கு, சுன்னாகம் ஹற்றன் நஷனல் வங்கி முகாமையாளர் சி.சுந்தரேஸ்வரன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக தெல்லிப்பளை ப.நோ.கூ.சங்கத் தலைவர் சி.சிவமகாராசா, காங்கேசன்துறை மக்கள் வங்கி முகாமையாளர் பொன்.கணேசமூர்த்தி, யாழ்ப்பாண மாவட்ட விளையாட்டு அதிகாரி றோகான் இராஜசிங்கம், தெல்லிப்பளை அரசியற்துறைப் பொறுப்பாளர் இ.சரவணன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (101)

# சுனாமி அதிர்ஷ்ட சீட்டுக்கு 5 லட்சம் ரூபா பணப் பரிசு

(யாழ்ப்பாணம்)

தேசிய லொத்தர் சபையால் சுனாமி அனர்த்த நிவாரண நிதி சேகரிப்புக்காக இலங்கையில் முதன்முதல் அறிமுகப்படுத்தப்பட்ட 'ஸரன' அதிர்ஸடலாபச் சீட்டில், யாழ். மாவட்ட விற்பனை விநியோக முகவரால் விற்பனை செய்யப்பட்ட அதிஸ்டலாபச் சீட்டுக்கு முதலாம் பரிசான 5 லட்சம் ரூபா கிடைத்துள்ளது.

இந்தப் பரிசுக்குரிய சீட்டு வைத்திருப்பவர் - 55, முனீஸ்வரன் வதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள யாழ்.மாவட்ட முகவர் அலுவலகத்தில் தொடர்பு கொள்ளுமாறு, யாழ். மாவட்ட முகவர் மகேந்திரம் அறிவித்துள்ளார். பரிசுக்குரிய வெற்றி இலக்கம் 72788 என்பது குறிப்பிடத்தக்கது. (63)

## மதுவரித் திணைக்கள ஊழியர்கள் மீது இனந்தெரியாதோர் தாக்குதல்

அச்சுவேலி பஸ் நிலையத்துக்கு அருகில் சட்டவிரோதமான முறையில் இயங்கிவந்த மதுபான விற்பனை நிலையத்தை முற்றுகையிட்டு, விசாரணை செய்த மல்லாகம் மதுவரித் திணைக்கள ஊழியர்களை - இனம்தெரியாத மூவர் தாக்கிவிட்டுத் தப்பிச் சென்ற சம்பவமொன்று கடந்தவாரம் இடம் பெற்றுள்ளது.

இதுபற்றி மதுவரி உத்தியோகத்தர்கள் அச்சுவேலிப் பொலிஸ் நிலையத்தில் செய்த முறைப்பாட்டையடுத்து, சந்தேக நபர்கள் மூவரை அச்சுவேலிப் பொலிஸார் கைதுசெய்து, மல்லாகம் நீதிமன்றில் ஆஜர் செய்தனர். (101)

# சுனாமியால் பாதிக்கப்பட்ட ஆசிரியர்கள் இடமாற்றத்துக்கு விண்ணப்பிக்கலாம்

சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட வடக்கு-கிழக்கைச் சேர்ந்த, ஆனால் தற்போது வடக்கு-கிழக்கு மாகாணத்துக்கு வெளியே சேவை புரியும் ஆசிரியர்கள் - தமது சொநத மாவட்டங்களில் தமது வதிவிடங்களுக்கு அருகாமையில் சேவைபுரிய விரும்பின், அவர்களுக்கு தற்காலிக இடமாற்றங்களை உடனடியாக வழங்க மத்திய கல்வி அமைச்சு தயாராகவுள்ளது.

எனவே, இத்தகைய இடமாற்றத்தைப் பெறவிரும்பும் ஆசிரியர்கள் தமது சுனாமி அனர்த்த சேதங்கள் குறித்த விண்ணப்பத்துடன், இடமாற்ற விண்ணப்பத்தையும் இணைத்து - கல்வி அமைச்சின் செயலாளருக்கு விண்ணப்பிக்க முடியும் என்றும், இந்த விண்ணப்பத்தின் ஒரு பிரதியை இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கப் பொதுச் செயலாளரின் கீழ் குறிப்பிடப்படும் -

த.மகாசிவம், பொதுச் செயலாளர், இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம், இல: 206, பிரதான வீதி, திருகோணமலை.

என்ற முகவரிக்கு உடனடியாக அனுப்புமாறும் வேண்டப்படுகின்றனர்.



கௌசல்யன் உட்பட 6 பேர் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவத்தைக் கண்டித்து - யாழ். குடாநாட்டு கல்விச் சமூகத்தினரால் நேற்று நடத்தப்பட்ட கண்டனப் பேரணியின் இறுதியில், யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம், கல்வியியற் கல்லூரி, ஆசிரியர் கலாசாலை, கல்வி மேம்பாட்டுப் பேரவை, தமிழ் மாணவர் ஒன்றியம் ஆகியவற்றின் பிரதிநிதிகளால் யாழ். போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு அதிகாரியிடம் மகஜர்கள் கையளிக்கப்படுவதைப் படங்களில் காணலாம்.





# பனையின் அமைப்பு

தானியங்களாகிய நெல், பயறு, உழுந்து போன்றவைகளும் இப்படியான முளை தன்மையினையே கொண்டுள்ளன. ஆனால் பனம் விதை நட்டவுடன் இதன் முளை நிலத்தின் கீழ் நோக்கியே வளர்கிறது.

இந்த முளையில் இருந்து கீழ் நோக்கி 1 தொடக்கம் 11\2 அடி ஆழத்துக்கு கிழங்கு வளர்ந்து செல்கிறது. கிழங்கு வளரும்போது, அதன் அடிப்பாகத்தில் இதனுடன் சேர்ந்து வேரும் வளர்கிறது. இவ்வேர் 2 தொடக்கம் 3 அடி ஆழம்வரை வளரும். இந்தக் கிழங்கு முற்றுவதற்கு ஏறத்தாழ ஒரு வருடம் செல்கிறது. இந்தக் கிழங்கினுள் காணப்படும் பீலி இந்தக் கிழங்கு முற்றியதும் முதல் இலையினை ஒரு வருடத்தின் பின்பு வெளியே தள்ளுகிறது. இதில் இருந்து பனை வடலியாக, பின்பு பனை மரமாக வளருகிறது. இவ்வாறு முளைக்கும் முறைதான் முளைதிறனில் பாதிப்பு ஏற்படுவதற்கு வழியமைக்கிறது.

பனம் விதை நாட்டப்பட்டு, இதிலிருந்து முளை இரண்டு மூன்று



வடலிப்பருவம்

வாரங்களில் நிலத்துக்குக் கீழே வளரத் தொடங்கும். இது வளர்ந்து கீழே கிழங்காகச் செல்லும். அதன் கீழேயே பனையின் வேர் வளரும். இதன் பின்பே பீலி, வளர்ந்து வெளியே வரும்.

இது பின்பு வடலியாகி பெரிய பனை மரமாகிறது. பூ பூப்பதற்கு ஏறத்தாழ 15 தொடக்கம் 20 வருடங்கள் செல்கின்றன. பூ பூத்த பின்பே இது ஆண் பனைமரமா அல்லது பெண் பனைமரமா என்ற பால் பாகுபாட்டை அறியக் கூடியதாக இருக்கிறது. இது பனை மரத்தின் ஒரு தனித்துவ அம்சமாகும். எதிர் காலத்தில் இந்தத் தாவரவியலில் செய்யப்படும் ஆராய்ச்சிகள் மூலம் இதனை இளமையிலேயே கண்டறியக் கூடிய வாய்ப்புக்கள் காணப்படுகின்றன.

1. விதை நட்ட நாளில் இருந்து 21 நாட்கள் வரை - முளைபருவம்.


2. 21 நாள் முதல் 90 நாட்கள் வரை- கிழங்குப் பருவம்.

3. 3 ஆவது மாதம் தொடக்கம் 5 ஆவது மாதம் வரை - முற்றிய கிழங்குப் பருவம்.

4. 5 ஆவது மாதம் தொடக்கம் 2 ஆவது வருடம் வரை - பீலிப் பருவம்.

5. 2 ஆவது வருடம் தொடக்கம் 10 ஆவது வருடம் வரை - வடலிப் பருவம்.

6. 10 தொடக்கம் 15 - 20 வருடங்கள் - பூத்துக் காய்க்கும் பருவம்.



முற்றிய கிழங்குப் பருவம் பீலிப் பருவம்

பனையின் சராசரி உயரம், 50 தொடக்கம் 60 அடிகள் வரை காணப்படுகிறது. பனையில் இருந்து முழுப்பயனையும் பெறுவதற்கு இந்த உயரமும் பாரிய தடைக் கல்லாக இருக்கின்றது.

வடகீழ் பருவப் பெயர்ச்சி மழை ஏற்படும் போது, பனம் விதை நடுகை செய்யப்பட்டு, பனங்கன்று வளர்



பூத்துக் காய்க்கும் பருவம்

கிறது. இவ்வாறு முளைக்கும் போதே ஓரளவு மழை தேவைப்படுகிறது. பின்பு குருத்தோலை வெளிவந்து 1- 2 வருடங்களில் சிறு வடலியாக வளரும் இதன் ஓலை 11\2 அடி விட்டம் கொண்டதாக காணப்படும். பின்பு 5-10 வருடங்களில் இது சுமார் 5-10 அடி உயரம் கொண்ட வடலியாக வளரும்.

வடலிப் பருவங்கள் நான்கு பிரிவாக வகுக்கப்பட்டுள்ளன. 1 மாதம், 2 வருடம், 5 வருடம், 10 வருடம்.

(முற்றும்)

நன்றி
பனையியல் -
முருகேசு பாக்கியநாதன்

# நெல்வயல்களிலும் மீன் பிடிக்கலாம்

விவசாய உற்பத்திகளில் மிக முக்கியமாக, மக்களின் அன்றாட உணவில் பிரதான பங்கை நெல் வகிக்கிறது. அண்மைக்காலத்தில் தமிழர் தாயகப் பிரதேசத்தில் உற்பத்தி செய்யப்பட்ட நெல்லில் 60 வீதமான நெல், வெளி மாவட்டங்களுக்கு ஏற்றுமதிசெய்யப் பட்டதாக அறிய முடிகிறது. இது மக்களின் தேவையைப் பூர்த்தி செய்யக் கூடிய அளவுக்கு நெல் உற்பத்தி இடம்பெறுவதை வெளிப்படுத்தி நிற்கிறது.

ஆனால், யாழ்ப்பாணம் மாவட்டத்தில் நன்னீர், உவர்நீராகும் பிரச்சினை பற்றி அடிக்கடி பிரஸ்தாபிக்கப்படுகிறது. இது விவசாய நிலங்களுக்கும் பொருந்தும். தற்பொழுது பெரும்பாலான விவசாய நிலங்களில், நீரிறைக்கும் இயந்திரம், மின்சாரத்தில் இயங்கும் மின்மோட்டார்கள் மூலமே விவசாயிகள் நீர் இறைக்கின்றனர். இது செலவைக் குறைப்பதுடன், இலாபகரமானதுமாகும்.

இவ்வாறு தொடர்ச்சியாக மோட்டார் இயந்திரங்களைப் பயன்படுத்தி கிணறுகளிலிருந்து நீரைப் பாய்ச்சும் போது, கிணற்றுநீர் அடிமட்டத்துக்குச் செல்கிறது. இதனால்கூடக் காலப்போக்கில் நன்னீர் உவர்நீராகும் சந்தர்ப்பங்கள் அதிகம். சில இடங்களில் நன்னீர்க் கிணறுகள் உவர்நீராக மாறிவிட்டமையையும் அறியக்கூடியதாகவுள்ளது.

இந்தப் பிரச்சினைக்கு, விவசாய நிலங்களில் நீரைச் சேமிப்பதை ஒரு தீர்வாகக் கொள்ளமுடியும். அதாவது, சிறு சிறு குளங்களை ஏற்படுத்தி நீரைச் சேகரிக்க முடியும்.

பல வருடங்களுக்கு முன்னர் நெல் வயல் காணிகளில், குளங்களும் அதில் ஏராளமான மீன்களும் இயற்கையாகவே இருந்துள்ளன.

இந்த விவசாய நிலங்களில் அமைந்திருந்த குளங்களில் மீன்பிடித்தமைக்கான ஆதாரங்களும் உள்ளன.

காலப்போக்கில், செயற்கை உரங்களைப் பயன்படுத்த ஆரம்பித்தும், வயல்களில் இருந்த மீன்கள் அருகியிருக்கலாம். ஆனால் செயற்கை உரங்களால் 'கட்லா' என்ற மீன் இனம் பாதிக்கப்படமாட்டாது என்பதை ஆராய்ச்சிமூலம் கண்டறிந்து, அதை வளர்க்க அயல்நாட்டில் ஆரம்பித்துள்ளனர்.

மேலும், நெற்பயிர்களுக்குத் தேவையான நைதரசன் இயற்கையாக காற்றிலேயே இருக்கிறது. நெற்பயிர்களுக்கு நடுவில் மீன்கள் சென்று மண்ணைக் கிளறி விடுவதால், நெற்பயிருக்குத் தேவையான நைதரசன் சத்து, (அதாவது யூரியா) கிடைத்து விடுகிறது. அத்துடன், சூத்திர முறையில் நீர் இறைப்பதால், நிலநீர் உவர்த்தன்மை அடைவதைத் தடுத்துநிறுத்த முடியும். கால்நடைகள் மூலம் விவசாயிகளுக்கு நன்மையுண்டு. கால்நடைகளையும் விவசாயத்துக்குப் பயன்படுத்த முடியும்.

ஆகவே விவசாயிகள், தத்தம் நிலங்களிலிருந்து விவசாய உற்பத்திகளின் பயனைப் பெறுவதுடன், வேறுபல பயன்களையும் பெற்றுக்கொள்ளமுடியும்.

துறைசார் மாணவர்கள், வித்தியாசமான விவசாய ஆய்வுகளில் ஈடுபடுவது எமது பிரதேச விவசாய நிலங்களின் வளத்தையும், உற்பத்திகளையும் மேலும் ஊக்குவிப்பதாக அமையும்.

சுபோதினி இராஜகோபால்

# கோழி வளர்ப்பும் அதன் பராமரிப்பும்

பெரும்பாலான வீடுகளில் கோழி வளர்க்கப்படுகிறது. குறைந்த மூலதனத்துடன் அதிக இலாபத்தைப் பெற்றுக் கொள்ளக் கூடியதாக இந்தக் கோழி வளர்ப்பு இருக்கிறது.

**☛ கோழி வளர்ப்பு மூலம் கிடைக்கும் நன்மைகள் –**

1. குறுகிய காலத்தில் பயனைப் பெறமுடியும்.
2. முட்டை இறைச்சி போன்ற புரத உணவுகளைப் பெற்றுக் கொள்ள முடியும்.
3. சுயதொழில் வாய்ப்பின் மூலம் வருமானத்தை ஈட்டிக் கொள்ள கூடியதாக இருத்தல்.
4. குறைந்த மூலதனத்துடன் கூடிய நன்மை.
5. பராமரிப்புக்கு அதிக நேரம் செலவிடத் தேவையில்லை.

**☛ கோழி வளர்ப்பில் ஈடுபடும் போது கவனத்தில் கொள்ள வேண்டிய விடயங்கள்**

1. சனச் செறிவு அற்ற பிரதேசத்தில் கோழி வளர்ப்பில் ஈடுபட வேண்டும்.
2. காற்றோட்ட வசதி கொண்ட இடத்தை தெரிவு செய்ய வேண்டும்.
3. நல்லின கோழிக் குஞ்சுகளை கொள்வனவு செய்யக் கூடிய வசதி இருத்தல் வேண்டும்.
4. கோழிகளை பாதுகாக்கக் கூடிய வசதிகள் இருத்தல் வேண்டும்.
5. குஞ்சுகளை நோயிலிருந்து பராமரிக்கக் கூடிய வசதி.
6. கோழிகளின் எண்ணிக்கைக்கேற்ப செலவு செய்யக் கூடிய வசதி.
7. கோழித் தீனை இலகுவாக பெறக்கூடிய வசதி.
8. இறைச்சி, முட்டை என்பவற்றுக்கு சந்தை வாய்ப்பு இலகுவாக கிடைக்கக் கூடியதாக இருத்தல் வேண்டும்.

**☛ கோழி வளர்ப்பிலுள்ள பிரச்சினைகள் –**

1. கடும் வெப்ப காலத்தில் கோழிகளுக்கு நோய் பரவி இறத்தல்.
2. கோழியின் எச்சத்தால் சூழல் மாசுபடுகிறது.

ஆனால் இதனை இயற்கைப் பசளை தயாரிப்பில் ஈடுபடுபவர்களுக்கு வழங்க முடியும். அல்லது கிளைத்தொழிலாக இதில் ஈடுபடலாம்.

சிறந்த இனத்தைச் சேர்ந்த கோழிகள் வருடத்துக்கு 300 முட்டைகள் வரை உற்பத்தி செய்யும் என ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

- மட்டுவிலூர்.தி.சாரங்கன் -

# குடாநாட்டு சந்தை நிலவரம்

| பொருட்கள் | சுன்னாகம் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | மருதனார்மடம் | சங்கானை | சாவகச்சேரி | நெல்லியடி | பருத்தித்துறை |
|---|---|---|---|---|---|---|---|---|
| பயிற்றங்காய் | 60/= | 70/= | 80/= | 70/= | 60/= | 60/= | 70/= | 70/= |
| வெண்டிக்காய் | 40/= | 30/= | 40/= | 40/= | 35/= | 40/= | 40/= | 60/= |
| உருளைக்கிழங்கு | 60/= | 50/= | 60/= | 50/= | 60/= | 65/= | 70/= | 75/= |
| கத்தரிக்காய் | 90/= | 70/= | 70/= | 90/= | 80/= | 80/= | 80/= | 100/= |
| பாகற்காய் | 30/= | 60/= | 70/= | 30/= | 30/= | 60/= | 70/= | 60/= |
| கரட் | 80/= | 70/= | 80/= | 80/= | 70/= | 80/= | 80/= | 80/= |
| பீற்றூட் | 40/= | 40/= | 50/= | 40/= | 35/= | 60/= | 40/= | 60/= |
| முருங்கைக்காய் | - | - | - | - | - | - | - | 120/= |
| வெங்காயம் | 30/= | 30/= | 40/= | 30/= | 35/= | 40/= | 50/= | 35/= |
| பச்சை மிளகாய் | 50/= | 50/= | 60/= | 50/= | 60/= | 40/= | 70/= | 60/= |

## தொழில்மலர்

# வணிக உத்திகள் மூலம் மாற்றங்களை ஏற்படுத்த முடியும்

(சென்றவாரத் தொடர்ச்சி...)

இழப்பு ஏற்படக்கூடிய நிலை இருந்தால், அதைத் தவிர்க்கவும் அல்லது குறைக்கவும் விரைந்து செயற்படவேண்டும். காலந்தாழ்த்துதல் மாற்றுத் திட்டத்தைச் செயற்பட இயலாமல் செய்துவிடும்.

முதல் முதலாக உருவாக்கப்பட்ட திட்டம், அப்போதைய சூழ்நிலைக்கேற்ப சில அனுமானங்கள் அடிப்படையில் உருவாக்கப்பட்டிருக்கும். சூழ்நிலை மாறும்போது, அனுமானங்கள் தகர்ந்து விடுகின்றன. எனவே திட்டமும் மாற்றப்பட வேண்டும். எந்த எந்த நிறுவனங்கள் சூழ்நிலை பற்றிய தகவல்களை உடனுக்குடன் பெறுகின்றனவோ அவை வணிக உத்திகளைச் சிறப்பாகக் கையாள முடியும்.

**சூழ்நிலை பற்றிய தகவல்களை உடனுக்குடன் பெறுகின்ற நிறுவனங்கள், வணிக உத்திகளைச் சிறப்பாகக் கையாளமுடியும்.**

வணிக உத்திகள் பெரும்பாலும் சுருக்கமாக, வைத்திருக்கப்படவேண்டியவை. போட்டிச் சூழ்நிலையில் ஒரு நிறுவனத்தின் வணிக உத்திகள், போட்டி நிறுவனத்துக்குத் தெரிந்துவிட்டால், அவற்றைத் தகர்ப்பதற்கு அது எதிர்நடவடிக்கை எடுத்துவிடக்கூடும்.

எனவே மாற்றுத் திட்டம் உருவாக்கப்பட்டுச் செயற்படுத்தப்படும் காலம் வரை உத்திகள் இரகசியமாக வைத்திருக்கப்படவேண்டும். இதில் ஒரு சிக்கலும் உண்டு. உத்திகள் நிறுவனத்தின் சூழ்நிலை வரையில் புரிந்துகொள்ளப்பட்டால்தான் செயற்பாடுகளை முடுக்கிவிட்டு, பலன்களை அடையமுடியும். ஆனால் அப்படி கீழ்நிலைவரை செல்லும் தகவல்கள் போட்டி நிறுவனத்துக்குச் சென்றுவிடக்கூடும். எனவே விழிப்புணர்வு தேவை.

எதிர்காலத்தை உருவாக்குபவை உத்திகள். எனவே கையிலுள்ள வளங்கள் எவை?, அவற்றின் ஈடுபாடுகள் எவை? என்பன விளக்கப்பட வேண்டும். சூழ்நிலை மாறும்போதும், உத்திகள் உருவாகும் போதும் இத்தகைய விளக்கம் தரப்படல் வேண்டும். உத்திகள் செயற்படும்போது அவை வெற்றி பெற்றுவிடும் என்று நம்பி இருந்துவிட முடியாது.

நிலையின்மை, சந்தேகமான இடர்கள், எதிர்பார்க்கப்படும் இடர்கள் ஆகியவற்றையும் எதிர்கொள்ளும் வகையில் உத்திகள் உருவாக்கப்படுவதோடு, அத்தகைய சூழ்நிலையில் நிறுவனம் பிழைத்திருக்கவேண்டிய அடிப்படைக் கூறுகள் திட்டத்தில் மாறாமலிருக்கும்படி பார்த்துக்கொள்ள வேண்டும்.

பொதுவாக வணிக உத்திகள், நிறுவனத்தின் பலம், பலவீனம், தகுதி ஆகியவற்றின் அடிப்படையில் உருவாக்கப்படும்போது, அவை வெற்றி பெறுகின்றன. (முற்றும்)



# சுய தொழில்

## பிரம்புப் பொருட்கள் தயாரித்தல்

பிரம்புமூலம் தயாரிக்கப்படும் பொருட்கள் நீண்டகாலம் பாவிக்கக்கூடியவை, உறுதியானவை. அலுவலகப் பாவிப்புக்கான கடதாசிக் கூடைகள், தட்டுக்கள், கதிரைகள், சாதாரண கூடைகள் போன்றனவும், வேறுபல பொருட்களும் பிரம்பு மூலம் உற்பத்தி செய்யப்படுகின்றன. குடிசைக் கைத்தொழிலாக வீட்டிலேயே இந்தத் தொழிலை மேற்கொள்ள முடியும்.

குறுகியகாலப் பயிற்சியுடன் இந்தத் தொழிலை ஆரம்பிக்கலாம். தொழில்நுட்பத்திறனின் வளர்ச்சிக்கேற்ப உற்பத்திப் பொருளின் தரமும் வளர்ச்சியடையுமாகையால், தொழில்நுட்பத் தேர்ச்சி பெறுவது மிக முக்கியமானதாகும்.

**மூலப்பொருட்கள்:-**

**பிரம்பு கிடைக்குமிடங்கள்.**

மட்டக்களப்பு - கொடுவாமடு, செங்கலடி, புதுக்குடியிருப்பு, திருகோணமலை - தம்பலகாமம்.

**இந்தத் தொழிலுக்குத் தேவைப்படும் உபகரணங்கள்:-**

குறடு, ஆணி, கம்பி போன்றனவாகும்.

அலுவலகங்களும், தனியார் நிலையங்களும் பிரம்பு உற்பத்திப் பொருட்களை விரும்பி வாங்குகின்றன. வீட்டுத் தளபாடங்களாகவும் பிரம்புப் பொருட்கள் பயன்படுகின்றன. பெரிய ஹோட்டல்களில் பிரம்பு உற்பத்திப் பொருட்கள் அலங்காரப் பொருட்களாகப் பயன்படுகின்றன.

அத்துடன், மரத்தளபாடங்களின் விலை அதிகரித்துவரும் இந்தக் காலகட்டத்தில், பிரம்புத் தளபாடங்களை மக்கள் பெரிதும் விரும்பி வாங்குவார்கள். துணைக்குத் தொழிலாளர் சிலரை வைத்துக்கொள்வதன் மூலம் உற்பத்தியையும், வருமானத்தையும் அதிகரிக்கமுடியும்.

எனவே, பிரம்பு உற்பத்திப் பொருட்களுக்கு நிலையான சந்தை வாய்ப்பு உண்டு.

# உலக பொருளாதாரத்தை மாற்றிய மையமற்ற ஒழுங்கமைத்தல்

இருபத்தோராம் ஆண்டு - ஒரு புரட்சிகரமான மாற்றமாக மனிதனின் நடை, உடை, பாவனை அனைத்துமே மாற்றமடைந்தது. இதனால் தொழிற்துறையும் மாற்றமடைந்து செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டது. இந்த மாற்றமானது, மனித அறிவு, திறமை, போன்றவற்றை அடிப்படையாகக் கொண்டு உருவான ஒரு முறையாகும்.

பதவிவழி ஒழுங்குமுறையிலான தொழில் முயற்சி அமைப்பே ஆரம்பம் முதல் இருபதாம் நூற்றாண்டின் இறுதி வரை காணப்பட்டது. இந்தமுறையின் கீழேயே பிரித்தானிய பருத்தி ஆலைகளும், இரும்புச் சுரங்கங்களும் காணப்பட்டன. ஆனால் அப்போது ஒரு தெளிவான வரைவிலக்கணமோ, வரையறையோ காணப்படவில்லை என்றே கூறப்படுகிறது. பிற்காலத்திலே கட்டளையிட்டு, நிர்வகிக்கும் முறை வரையறை செய்யப்பட்டு வந்ததுடன், பலரது வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும், புதிய உற்பத்திகள் பெறவும் செய்தது என்றே கருதப்படுகிறது.



உலகவங்கி, செஞ்சிலுவைச் சங்கம், அரசசார்பற்ற அமைப்புகள் போன்ற உயர் இயல்புள்ள அமைப்புகளின் உருவாக்கத்தைத் தொடர்ந்து, அவற்றைத் தேசிய மட்டத்திலும், சர்வதேச மட்டத்திலும் நடத்துவது தொடர்பான பிரச்சினைகள் மேல் எழுந்தன. இவற்றினூடாக மையமற்ற அமைப்பு முறைகள் தோற்றம்பெற வாய்ப்பாக அமைந்தது.

### மன்செஸ்டர் பருத்தி ஆலையிலிருந்து மைக்றொசொப் வரை

பதவி வழி ஒழுங்கமைப்பு முறையில் காணப்பட்ட சிக்கல்கள் காரணமாக 1970 ஆம் ஆண்டு மைக்றொசெப் தாபகர்களில் ஒருவரான பில் கேட்சும் Proctera gumble ஆல் பின்பற்றப்பட்ட மூல உபாயம், நிதியியல், மனிதவளம் தொடர்பான கொள்கைகள் தலைமையகத்திலும் நடத்தல் பணிகள் பல சிறிய அலகுகளிலும் நடைபெறுவதையுமே பின்பற்றினராம். உலகமயமாக்கல், தொடர்பாடல் புரட்சி என்பனவே முதனிலைத் தொழில் முயற்சி அமைப்பு முறை தோல்வி காண காரணங்களாக அமைந்தது.

### தற்கால முகாமையாளரின் விருப்பும் மையமற்ற அமைப்பு மாதிரியும்

தற்கால முகாமைத்துவமானது - நிர்வாக, முகாமைத்துவப் பிரச்சினைகளைத் தீர்க்கக்கூடிய அதிகாரப் பரவலாக்கல். அதாவது, தன்னிறைவடைந்த பிரிவுகளை நிர்வகிக்கும் பதவி முறையை நோக்கிச் சென்றுகொண்டுள்ளது. இதனையே மையமற்ற அமைப்புமாதிரி எனக் கூறுவதுடன் மனிதர்களின் அறிவு வலு அனுபவங்களை ஒன்று திரட்டுவதாகவும் உள்ளது.

**1) மனிதர்கள்**

நிறுவனங்கள் தமது நோக்கத்தை அடைய உதவ மிக முக்கியமான வளமாகக் காணப்படுகிறது. ஏனெனில் ஏனைய அனைத்து வளங்களையும் ஒன்றிணைத்து, நிறுவன நோக்கினை அடைய உதவும் ஒரு வளம் மனித வளமாகவே காணப்படுகிறது. மேலும் இந்த வளமானது, குறைவாகப் பயன்படுத்தும் வளமாகவும் காணப்படுகிறது.

மனித வளமானது, பாரிய முதலீடு எனக்கருதி பல நிறுவனங்கள் தமது நிதியை ஊழியர் கல்வி, ஊழியர் குடும்ப நலம் என்பவற்றில் பெருமளவு நிதி செலவிட்டு நிறுவன நோக்கினை அடைய முயல்கின்றன.

**2) அறிவு\அனுபவம்**

எப்போதும் இல்லாத அளவுக்குத் தற்போது இதற்கான முக்கியத்துவம் காணப்படுகிறது.

ஏனெனில் உற்பத்தித் திறனை அதிகரிப்பதற்காக இந்த வளம் - முக்கியமானதாக முகாமையினால் கருதப்படுகிறது.

**3) ஒன்றுதிரண்ட தன்மை**

கம்பனிக்குச் சொந்தமான சிறு சிறு அதிகாரப் பகுதிகளை, ஒன்றுதிரண்ட கட்டுப்படுத்தல், நெறியாள்தல் நடவடிக்கைகள் மூலம் செய்துகொள்ளலாம்.

இந்த முறைமூலம் நிறுவனம் தமது நோக்கினை இலகுவாக அமைத்துக் கொள்வதுடன், நிறுவன இலாபத்தையும் உயர்த்திக்கொள்ளவும் இது வாய்ப்பாகக் காணப்படுகிறது.

இதனைத் தொழிற் பிரிப்பின் ஊடாகவும் அடைய உதவும் என்பதைக் கருத்தில் கொண்டு நமது நாட்டிலும் இந்தமுறை பின்பற்றப்படாதது கவலைக்குரிய விடயமேயாகும்.

வணிகன்

# சர்வதேச நியமத்தை அரசு உதாசீனம் செய்வது சமாதானத்தை சாகடித்து விடுமென அஞ்சுகிறோம்

## கிளிநொச்சி மாவட்ட வெகுஜன அமைப்புகள் ஒன்றியம்

(கிளிநொச்சி)

அரச இறையாண்மைக்குட்பட்ட பிரதேசங்களில் இடம்பெற்றுவரும் படுகொலைகளுக்கு அரசே பொறுப்பேற்க வேண்டும் என்ற சர்வதேச நியமத்தை அரசு உதாசீனப்படுத்தி வருவது சமாதானத்தின் தோற்றுவாயைச் சாகடித்துவிடுமென அஞ்சுகிறோம் என, போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுத் தலைவருக்கு கிளிநொச்சி மாவட்ட வெகுஜன அமைப்புகளின் ஒன்றியம் கடந்த செவ்வாய்க் கிழமை கையளித்த மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்ட வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியத்தினரால் அண்மையில் கிழக்கிலங்கையில் நடைபெற்ற படுகொலையைக கண்டித்து, போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவுக்கு மகஜர் சமர்பித்தனர்.

இந்த மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

கிளிநொச்சி மாவட்டத்தில் வாழும் பல்லாயிரக்கணக்கான தமிழ்பேசும் மக்கள் ஒன்றுசேர்ந்து ஜனநாயக வழிமுறையிலான அரச எதிர்ப்புப் போராட்டம் ஒன்றை நடத்தி, மக்களின் உள்ளக் குமுறல்களின் வெளிப்பாட்டை இந்த மகஜரின் மூலம் வெளிப்படுத்தியுள்ளனர்.

கடந்த மூன்று ஆண்டுகளாக நடைமுறையில் இருக்கும் சமாதான வழிமுறைக்காலத்தில் கைச்சாத்திடப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கைக்கு எதிராக - கடந்த 07.02.2005 இல் வெலிக்கந்த அரச பாதுகாப்புப் பிரதேசத்தில் வைத்துக கௌசல்யன் உள்ளிட்ட தமிழர் தரப்புப் பிரதிநிதிகள் திட்டமிட்ட சதி முயற்சியால் படுகொலை செய்யப்பட்டமையை நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம்.

புரிந்துணர்வு உடன்படிக்கைக்குப் பின்னான போர் ஓய்வு காலங்களில் போர் நிறுத்த ஒப்பந்த விதியை மீறி, இவ்வாறான படுகொலைச் சம்பவங்களும், யுத்த நிறுத்த மீறல்களும் சமாதான விரோதிகளால் நடைபெற்றிருந்த போதும், புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் சமபங்காளியாகப் பொறுப்பேற்றுக் கொண்ட அரசு, எந்தவித ஆக்க பூர்வமான நடவடிக்கைகளையும் எடுக்காததையிட்டு நாம் பலத்த ஏமாற்றமும், விசனமும் அடைந்திருக்கிறோம். இவ்வாறு தொடர்ந்து ஒரு அரசு இறையாண்மைக்குட்பட்ட பிரதேசங்களில் இடம்பெற்றுவரும் படுகொலைகளுக்கு அந்த அரசே பொறுப்பேற்கவேண்டும் என்ற சர்வதேச நியமத்தைத் தாங்கள் அறிவீர்கள். எனிலும் இந்த விடயத்தை அரசு புறந்தள்ளி உதாசீனப்படுத்தி விடுவதென்பது தமிழர் தரப்பினர் சமாதானத்தின் தோற்றுவாயைச் சாகடித்துவிடும் என அஞ்சுகிறோம்.

சுனாமி கடற்கொந்தளிப்பால் இலங்கையில் வடக்கு - கிழக்கு தமிழர் தாயகப் பிரதேசமும் பெருத்த அழிவுகளைச் சந்தித்தபோது, அரசு மனிதாபிமான ரீதியிலேனும் எமது பிரச்சினைகளை அணுகாமல் மாற்றாந்தாய் மனப்பாங்குடன் நடந்து கொள்கிற இந்தச் சந்தர்ப்பத்தில் மேலும் எமது மக்களின் வாழ்வியல் கனவுகளைச் சிதறடிக்கும் கபட நோக்கமாகவே இவ்வாறான திட்டமிட்ட படுகொலைகளுக்குத் திரைமறைவில் அரசு உடந்தையாக இருப்பதாகவே நாம் உணர்கிறோம்.

நடைபெற்று முடிந்த படுகொலைகளுக்குத் தாங்களும் சர்வதேசமும் உள்ளடங்கலாக நேர்மையாக, காலந்தாழ்த்தாது அதே வேளை காலங்கடத்தாத நீதி விசாரணை நடைபெற வேண்டுவதோடு, சமாதான வழிமுறைகள் முறிவடைந்துவிடாத நிலையில் தமிழ் மக்களின் உணர்வுகளுக்கு மதிப்பளித்து, பொறுமை காத்துக் கொண்டு அரசு கட்டுப் பாட்டுப் பகுதியில் அரசியல் பணிகளில் ஈடுபடுகின்ற நிராயுதபாணிகளான போராளிகளினதும் மற்றும் பொது மக்களினதும் பாதுகாப்பை உறுதிப்படுத்தவேண்டிய ஒப்பந்தத்தின் பாற்பட்ட கடமையை மேலும் சிறப்பான முறையில் தொடரவேண்டும் என எதிர்பார்க்கிறோம்.

உலகப்பொது அரசாகிய ஐக்கிய நாடுகள் சபையினுடைய இன உரிமை தொடர்பான பரிந்துரைகளையும், நியமங்களையும் ஏற்றுள்ள இனம் என்ற வகையில் எமது உணர்வுகளை சாதகமான முறையில் பரிசீலிப்பீர்கள் என நாம் எதிர்பார்க்கிறோம் எனவும் அந்த மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கபில நிறத்தண்டுத்தத்தியின் தாக்கம் கிளிநொச்சி மாவட்டத்தில் அதிகம்

கிளிநொச்சி மாவட்டத்தில் 2004, 2005 ஆம் ஆண்டு காலபோக நெற்செய்கை பெரும் பாதிப்படைந்துள்ளதாக விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

கடந்த ஆண்டு முற்பகுதியிலும், இறுதிப் பகுதியிலும் பெய்த கடும் மழை காரணமாக நெற்பயிர்களில் ஏற்பட்டுள்ள கபில நிறத் தண்டு தத்திப் பூச்சிகளினால், நெற்பயிர்களில் ஏற்பட்ட நோய்த்தாக்கத்தால் நெல் உற்பத்தியில் பெரும் தாக்கம் ஏற்பட்டுள்ளதாகவும் விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

## வருடாந்த பொதுக் கூட்டம்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்ட கல்வி மேம்பாட்டுப் பேரவையின் வருடாந்த பொதுக்கூட்டம் எதிர்வரும் 23 ஆம் திகதி புதுக்குடியிருப்பு சிறி சுப்பிரமணியம் வித்தியாலய மண்டபத்தில் காலை 10 மணிக்கு இடம்பெறவுள்ளது.

இதில் வயலக்கல்வி உத்தியோகத்தர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள் எனப்பலரும் கலந்து கொள்ளவுள்ளனர் என, துணுக்காய்ப் பிரதிக்கல்விப் பணிப்பாளரும், முல்லைத்தீவு மாவட்ட கல்வி மேம்பாட்டுப் பேரவையின் செயலாளருமாகிய இராஜேஸ்வரன் தெரிவித்தார்.

# ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதி உதவியுடன் சமூக அபிவிருத்தி திட்ட ஆரம்பவிழா

மன்னார் மாந்தை மேற்கு பிரதேச செயலக பிரிவின் கீழ் விடத்தல்தீவு, ஆண்டான்குளம் ஆகிய கிராமங்களில் ஆசிய ஆபிவிருத்தி வங்கியின் நிதியுதவியுடன் தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தால் நடை முறைப்படுத்தப்படும் சமூக அபிவிருத்தித் திட்டத்தின் ஆரம்ப விழா கடந்த சனிக்கிழமை நடைபெற்றது.

இந்த நிகழ்வில் மங்கள விளக்கை மன்னார் மாவட்ட அரச அதிபர் எஸ்.விஸ்வலிங்கம், நிகொட் பிரதித்திட்டப் பணிப்பாளர் இராஜரட்ணம், விடத்தல்தீவு வணபிதா அருள்நாதன் அடிகளார் ஆகியோர் ஏற்றி வைத்தனர்.

நிகொட் நிறுவனத்தால் புதிதாகப் புனரமைக்கப்படவுள்ள முன்பள்ளிக் கட்டடத்துக்கான அடிக்கல் நாட்டு விழா இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் அடிக்கல்லை தமிழர் புனர்வாழ்வுக்கழகப் பொறியியலாளர் த.அன்ரன், தமிழர் புனர்வாழ்வுக்கழக மன்னார் மாவட்டப் பணிப்பாளர் அ.கேசவன், நிகொட பிரதித்திட்டப் பணிப்பாளர் இராஜரட்ணம், மன்னார் அரச அதிபர் விஸ்வலிங்கம் ஆகியோர் நாட்டினர்.

இந்த நிகழ்வில் இறுதியாக கலைநிகழ்வுகள் இடம்பெற்றன.

இதில் மன்னார் மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர், அரச அரசசார்பற்ற நிர்வாக உத்தியோகத்தர்கள், ஊழியர்கள், பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

# சமாதான சூழலிலும் தமிழ் மக்கள் உயிரிழப்புக்களை சந்திக்கின்றனர்!

## வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன்

(கிளிநொச்சி)

போர்க்காலத்தைப் போன்றே சமாதானச்சூழலிலும் தமிழீழ விடுதலைப் புலிகள் தமிழ் மக்களுக்காக உயிரிழப்புக்களைச் சந்தித்து வருகின்றனர் என, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

கிளிநொச்சியில் நேற்று முன்தினம் நடைபெற்ற கண்டனப் பேரணியில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.




அவர் மேலும் தெரிவிக்கையில்:-

சந்திரிகா அரசு தமிழீழ விடுதலைப்புலிகளை வலிந்து போருக்குள் தள்ளிவிடுவதன் நோக்கமாகவே கௌசல்யனின் படுகொலை அமைந்துள்ளது. தமிழ் மக்களால் சமாதான முயற்சிகள் மூலம் நல்ல தீர்வைப் பெற்றுக்கொள்ள முடியாது என்பதை இந்தப் படுகொலை உணர்த்தியுள்ளது.

கடந்த 50 ஆண்டுகளாக சிங்களப் பேரினவாத சக்திகளால் தமிழ் மக்கள் ஏமாற்றப்பட்டு வந்திருக்கிறார்கள். இன்றைய நிலையில பலம் மிகுந்த தமிழீழ விடுதலைப் புலிகள் தமிழ்மக்களின் பாதுகாவலராக, சக்தியாக இருக்கும் நிலையில் தமிழ் மக்களை ஏமாற்றிவிட முடியாது.

சுனாமி கடற்கொந்தளிப்பின் பின்னர் சந்திரிகாவுக்கு நல்ல காலம் தோன்றியுள்ளது. கிடைக்கின்ற உதவிகளெல்லாம் தென்னிலங்கையை வளப்படுத்துவதை நோக்காகக்கொண்டே அரசு செயற்பட்டு வருகிறது. சுனாமி அனர்த்தத்தைச் சந்தித்த தமிழ் மக்களுக்கு எந்தவித உதவிகளும் கிடைக்காத நிலை காணப்படுகிறது.

அரசு உதவிகள் செய்யாது தமிழ் மக்களைத் தொடர்ந்து புறக்கணிக்குமானால் - தமிழீழ அரசு உருவாவதை யாரும் தடுக்க முடியாது.

தென்னிலங்கையில் குளறுபடிகள் செய்துவரும் ஜே.வி.பியினரை சந்திரிகா தூக்கியெறியும் நிலைக்கு வந்துள்ளார். சமாதானச்சூழல் நிலவிய மூன்று ஆண்டு காலத்தில் தமிழ் மக்கள் எந்தவித முன்னேற்றத்தையும் காணவில்லை. மாறாக, உயிரிழப்புக்களையே சமாதானத்துக்காக விலையாகக் கொடுத்துள்ளார்கள்.

கருணா என்ற தேசத்துரோகியின் பேரில் இராணுவத்தினரும், புலனாய்வுத் துறையினரும் தென் தமிழீழத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளையும், தமிழ் மக்களையும் படுகொலை செய்துவருகிறது.

இந்தப் படுகொலைகள் எல்லாம விடுதலைப்புலிகளை போருக்குள் தள்ளும் சதிமுயற்சிதான். அரசு மேற்கொள்ளும் சமாதான முயற்சிகளெல்லாம் உலகநாடுகளில் இருந்து உதவிகளைப் பெற்றுக் கொள்வதற்குத்தான்.

தமிழ் மக்களைப் பொறுத்தவரை எந்த நெருக்கடியான சூழலிலும் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைமையைப் பலப்படுத்துவதை நோக்காகக்கொண்டு செயற்பட வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

# புனர்வாழ்வுக்கழகத்தின் வேலைத்திட்டத்தை உலக உணவுத்திட்டப் பிரதிநிதிகள் பார்வை!

வவுனியா மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக்கழகம் மேற்கொண்ட வேலைத்திட்டங்களை உலக உணவுத்திட்டப் பிரதிநிதிகள் கடந்த திங்கட்கிழமை பார்வையிட்டனர்.

வவுனியா - சேமமடு குளத்துக்கு அதிகளவு நீரைப் பெறுவதற்காக முதலி ஆற்றைத் திசைதிருப்பி அமைக்கப்பட்ட 1.5 கிலோமீற்றர் நீளமான அணைக்கட்டைப் பார்வையிட்டதுடன், இது தொடர்பாக விவசாயிகளிடம் அதன் நன்மைகளையும், பயன்களையும் கேட்டு அறிந்தனர்.

இந்த அணைக்கட்டு பீ.ஆர்.சி நிறுவனத்தின் நிதி உதவியுடனும், உலக உணவுத்திட்டத்தின் பங்களிப்புடனும், தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தால் அமைக்கப்பட்டது.

மேலும் வவுனியா வடக்கு கோவில் புளியங்குளத்தில் உலக உணவுத்திட்டத்தின் பங்களிப்புடனும், நிகொட் நிறுவனத்தின் நிதியுதவியுடனும் தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தால் அமைக்கப்பட்ட மலசலகூடங்களையும் பார்வையிட்டு, மக்களின் நிலைப்பாட்டையும் கேட்டறிந்தனர்.

இதில் உலக உணவுத்திட்ட புனர்வாழ்வு அமைச்சு கண்காணிப்பாளர் இ.பரநிருபசிங்கம், வவுனியா மாவட்ட உலக உணவுத்திட்ட தொழில்நுட்ப ஆலோசகர் சி.புண்ணியசீலன், மாவட்ட வேலைத்திட்ட பரிசோதகர் எஸ்.செல்வகுமார், மாவட்ட உலக உணவுத்திட்ட சிரேஷ்ட தொழில்நுட்ப அலுவலரும, கண்காணிப்பாளருமான எஸ்.நடேசலிங்கம் மற்றும் தமிழர் புனர்வாழ்வுக்கழகப் பிரதிநிதிகளும் வேலைத்திட்டங்களைப் பார்வையிட்டுச் சென்றுள்ளனர்.

## துவிச்சக்கரவண்டி ஓட்டுநர்களுக்கு அறிவித்தல்

இரவு வேளைகளில் துவிச்சக்கர வண்டிகளில் பயணம் செய்வோர் முகப்பு வெளிச்சம் பொருத்தியிருக்க வேண்டுமென, தமிழீழ காவல்துறையின் வாகனப் போக்குவரத்துப் பிரிவுப் பொறுப்பாளர் தெரிவித்துள்ளார்.

முன் வெளிச்சம் இன்றி இரவு வேளைகளில் துவிச்சக்கர வண்டி ஓடுவது எம்மால் அவதானிக்க முடிகிறது. வெளிச்சமின்றித் துவிச்சக்கர வண்டி ஓட்டுவதால் வீதி விபத்துக்கள் ஏற்படும் வாய்ப்புகள் உள்ளன. ஆகவே இரவு நேரத்தில் துவிச்சக்கரவண்டி ஓட்டும் போது, வெளிச்சமபாய்ச்சி ஓட்டுவதுடன் விபத்துக்களைத தவிர்த்து - உயிர் இழப்புகள், உடமை இழப்புகள், ஏற்படாத வகையில் நடக்குமாறு துவிச்சக்கரவண்டி ஓட்டுநர்களை, வாகனப் போக்குவரத்துப் பரிவுப் பொறுப்பாளர் கேட்டுள்ளார்.

துணுக்காய் பிரதேசத்தில்

# நியாப் II திட்டத்தின் கீழ் புதிய கிராமங்கள் தெரிவு!

முல்லைத்தீவு - துணுக்காய் பிரதேசத்தில் நியாப் ii திட்டத்தின் கீழ் புதிய கிராமங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

இந்தக் கிராமங்களைத் தெரிவு செய்யும் முதற்கட்ட கலந்துரையாடல் நேற்று முன்தினம் வவுனிக்குளம் நீர்ப்பாசனப் பொறியியலாளர் சிவகுமார் தலைமையில் இடம்பெற்றது.

இந்தக் கலந்துரையாடலின் முதற கட்டமாக துணுக்காய் உதவி அரச அதிபர் பிரிவின் கீழ் உள்ள ஆலங்குளம், உயிலங்குளம், அனிஞ்சியன குளம் ஆகிய கிராமங்கள் தெரிவு செய்யப்பட்டன. இந்தக் கிராமங்களில் பொதுநோக்கு மண்டபங்கள், பொதுக் கிணறுகள், குளங்கள் புனரமைப்புப் போன்ற அபிவிருத்திப் பணிகள் மக்கள் பங்களிப்புடன் மேற்கொள்ளப்படவுள்ளன.

## இன்றைய நாளில்... அன்று நிகழ்ந்தவை...

**பெப்ரவரி 17**

1461 : முப்பது ஆண்டுகள் நீடித்த ரோஜாக்கள் போர் முடிவுக்கு வந்தது.

1836 : ஸ்ரீ இராமகிருஸ்ணபரமஹம்சர் அவதார நாள்.

1863 : செஞ்சிலுவைச் சங்கம் ஜெனிவாவில் ஆரம்பிக்கப்பட்டது.

1897 : ரூடால் ஃ ப் டீசல் என்பவரால் கண்டுபிடிக்கப்பட்ட இயந்திரம் பெற்றோலியம் ஸ்பிரிட்டை பயன்படுத்தி முதன் முதலில் ஓடத் தொடங்கியது.

1913 : உலகின் முதலாவது விமானமான பிளயர் – 1 விமானத்தின் பறப்பு ரைட் சகோதரர்களால் மேற்கொள்ளப்பட்டது.

1931 : ரோக்கியோவில் பேஸ் போல் விளையாட்டு முதன் முதலாகத் தொலைக்காட்சி மூலம் ஒளிபரப்பப்பட்டது.

1942 : சிங்கப்பூரில் இரண்டு நாட்களுக்கு முன்னர் ஜப்பானிடம் சரணடைந்த படைவீரர்கள் மற்றும் போர்க் கைதிகளாகப் பிடிக்கப்பட்ட இந்தியப் படையினர் கப்டன் மொ ஹன் சிங் தலைமையில் ஆஸாத் ஹிந்த் ஃ பௌஜ் என்ற இந்திய தேசிய இராணுவத்தை நிறுவினர்.

1979 : மூன்று லட்சம் படைவீரர்கள் மற்றும் விமானப்படையினரது துணையுடனும் வியட்நாம் மீது சீனா படையெடுத்தது.

1986 : இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற சிந்தனையாளர் ஜி.கிருஸ்ணமூர்த்தி காலமானார்.

தொகுப்பு - சந்துரு

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

**சிந்தனைக்கு**

*ஒட்டார்பின் சென்றொருவன் வாழ்தல் அந்நிலையை*
*கெட்டான் எனப்படுதல் நனறு.*
திருக்குறள்

# நமது நோக்கு

## தென்பகுதி அரசியல் சுயநலமிகளால் ஆபத்தைநோக்கித் தள்ளப்படும் நாடு

வெலிக்கந்த படுகொலைச் சம்பவங்களின் பின்னர் ஏற்பட்டுள்ள தென்னிலங்கை அரசியல் கட்சிகளிடையேயான கருத்தியல் மோதல்கள் - இனிவரும் வாரங்களில் எத்தகைய மாற்றங்களை உண்டுபண்ணப்போகின்றது என்பது குறித்த விவாதங்கள் இன்று நாடளாவிய ரீதியில் சகல மட்டங்களிலும் விவாதிக்கப்படும் விடயமாகியுள்ளதுடன், அது தொடர்பாக பல்வேறு ஊடகங்களுடன் ஆருடங்களும்கூட வெளிவரத்தொடங்கியுள்ளன. குறிப்பாக ஆளும் ஐக்கியமக்கள் சுதந்திரமுன்னணியின் பிரதான பங்காளிகளான சிறிலங்கா சுதந்திரக்கட்சிக்கும், ஜே.வி.பிக்கும் இடையிலான மேலாதிக்கப்போட்டியின் காரணமான முரண்பாடுகள் - ஆட்சியே உடைந்துபோகும் அளவுக்கு விரிசல் கண்டு வருவது போன்று வெளிப்பார்வைக்குத் தோன்றினாலும், ஆட்சி உடனடியாக ஆட்டம் காணும் அளவுக்கு அவர்களிடையேயான உறவு, ஓடும் புளியம்பழமும் போல் ஒட்டியும் ஒட்டாமலும் தொடரும் சாத்தியமே அதிகம் இருப்பதாக சில அரசியல் அவதானிகள் கருதுகிறார்கள்.

இரு தரப்பினருக்குமிடையிலான உறவு, கொள்கைகளின் அடிப்படையில் அமைந்த இலட்சியபூர்வமான ஒன்றல்ல. ஒரு தவிர்க்க முடியாத அவசியம் காரணமாக சந்தர்ப்பவாத நோக்குடன் மேற்கொள்ளப்பட்ட ஒரு பிணைப்பேயாகும்.

உண்மையில் இந்த உறவுப்பிணைப்பானது - கடந்த பொதுத்தேர்தலில் ஐக்கியதேசியமுன்னணி அரசை தோற்கடிக்கவும், சமாதான முயற்சிகளுக்கு ஆப்புவைக்கவும் திட்டமிட்டு அதன் அடிப்படையில் சுயநல அரசியல் அபிலாஷைகளை மனதிற்கொண்டு பரஸ்பர நம்பிக்கையோ, புரிந்துணர்வோ, விசுவாசமோ ஏதுமின்றி ஏற்படுத்திக்கொண்ட ஒன்றேயாகும்.

அதிஷ்டவசமாக அந்தக் கூட்டணி அறுதிப் பெரும்பான்மையை வென்றெடுக்காத நிலையிலும், ஆட்சியை அமைக்கும் வாய்ப்பினைப் பெற்றதால் இன்று வரை ஒரு மாதிரி இழுபறிக்குள்ளும் தொடரக்காரணம், பதவிக் கதிரைகள் மீதான, விலகவே முடியாத பற்றுதலைத்தவிர வேறெதுவுமே கிடையாது.

இன்றும் கூட, இரு தரப்பினரும் அரசியல் அநாகரிகங்களாக மாறி ஒருவரையொருவர் வெளிப்படையாக சாடியும், குற்றம் சுமத்திக் கொண்டும் கூட்டணியை தொடர்வதில் ஆர்வம் கொண்டவர்களாக இருக்கிறார்கள் என்றால், அவர்களுக்கு அரசியல் சேற்றில் எப்படியும் புரண்டு புரண்டு சுகம் காணும் சூடுசுறணையற்ற தன்மை, இயல்பான ஒன்றாக மாறிவிட்டதும் ஒரு காரணம் என உறுதிப்படுத்திக் கூறலாம்.

அதிலும், ஜனாதிபதியைப் பொறுத்த மட்டில் ஜே.வி.பி குறித்த மதிப்பீடு எந்தளவில் உள்ளது என்பதை - அவர் அண்மைக்காலத்தில் அவர்கள் தொடர்பாக வெறுப்புடனும், எரிச்சலுடனும் விடுத்த நேரடியானதும், மறைமுகமானதுமான அறிவுறுத்தல்களும், எச்சரிக்கைகளும் தெளிவாகவே வெளிப்படுத்தியுள்ள போதிலும், ஜே.வி.பியினர் பதிலுக்கு மிரட்டும் தொனியிலான அச்சுறுத்தலை மட்டும் விடுத்துவிட்டு, பதவிக் கதிரைகளில் ஒட்டுண்ணிகளாக தொடர்ந்தும் இருப்பதிலேயே இறுக்கமாக இருப்பதானது, தனது ஆட்சிக்கு அவர்களால் உடனடியாக எந்தவிதமான ஆபத்தும் நேராது என்ற நம்பிக்கையை அவருக்கு கொடுத்துள்ளதாகவே உணரமுடிகிறது.


அதனால், தன்னையும் தனது அரசையும் கண்டிக்கும் விமர்சனங்கள் அனைத்துக்கும் ஜே.வி.பியினரே காரணம் என மக்களிடையே கருத்துக்களைப் பரப்பிவிட்டு, போ என்று சொன்னாலும் போய்த் தொலைகிறார்கள் இல்லை என்று சலிப்புக் கொண்டு வெறுப்பையும் ஜனாதிபதி மறைமுகமாக தனது உரைகளில் வெளியிடத் தவறவில்லை. இதன்மூலம் ஜனாதிபதி தன்னைத் தூய்மையான அரசியல் வாதியாக நிலைநாட்டிக் கொள்வதில் முனைப்பாக இருக்கிறார் என்றால் மிகையில்லை.

இது, ஜே.வி.பியினருக்கு தெரியாதவிடயமில்லை. ஆனால், இன்றைய ஆட்சியிலிருந்து விலகி - தாம் மானஸ்தர் என்பதை நிரூபிக்க முயன்றால் இதனைப் போன்றதோர் அருமையான சந்தர்ப்பம் இனிமேற் காலத்தில் இவ்வளவு சுலபமாக கிடைக்காது என்பதையும் உணர்ந்தே உள்ளதால், அவர்கள் மரியாதை கெட்டாலும் பதவிக் கதிரைகளை விடக்கூடாது என்று தீர்மானித்துவிட்டார்கள் என்றே சிந்திக்கத் தோன்றுகிறது.

எதுவானாலும் ஒட்டியும் ஒட்டாமலும், முரண்பாடுகளுடன் முட்டிமோதிக்கொள்ளும் நிலையிலேயே இந்த ஆட்சியை இழுத்துச் செல்ல - இருதரப்பினரதும் பதவிப் பசி இப்போதைக்கு விடாது என்றே தோன்றுகிறது.

எனவே, இந்த ஆட்சிக்குள் நிலவும் உள்ளகமுரண்பாடுகள் தொடரும் வரை, அரசால் எந்தவிதமான ஆக்கபூர்வமான நகர்வையும் தேசியப் பிரச்சினைகளிலோ, சமாதான முயற்சிகளிலோ மேற்கொள்ள முடியாத நிலையே தொடரப் போகின்றது. இதுவே இன்றைய அரசியல் சூழலின் யதார்த்தமுமாகும்.

## நாடும் நடப்பும்




# விடுதலைப்புலிகளின் உயர்மட்டக் குழுவை ஐரோப்பாவுக்கு அனுப்பிவைக்க ஏற்பாடு

(கொழும்பு)

இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ள நோர்வே விசேட தூதுவர் எரிக்சொல்ஹெய்ம், விடுதலைப் புலிகளின் உயர் மட்டக் குழுவை ஐரோப்பாவுக்கு அனுப்பிவைக்கும் ஏற்பாடுகளை மேற்கொள்ளவிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எதிர்வரும் 20 ஆம் திகதி இலங்கை வரவுள்ள எரிக் சொல்ஹெய்ம் - அரசாங்கத்துடனும், விடுதலைப் புலிகளுடனும் தொடர் சந்திப்புகளை நடத்தவுள்ளார். எரிக் சொல்ஹெய்முடன் நடைபெறவுள்ள சந்திப்புகளைத் தொடர்ந்து விடுதலைப் புலிகளின் உயர்மட்டக் குழுவினர் ஐரோப்பாவுக்கு விஜயம் செய்யத் திட்டமிட்டுள்ளனர்.

சுனாமி அனர்த்தத்தைத் தொடர்ந்து வடக்கு - கிழக்கு பகுதிகளில் மேற்கொள்ளப்படும் புனரமைப்புப் பணிகள் மற்றும் சமாதான முயற்சிகள் தொடர்பாக சர்வதேச இராஜதந்திரிகள் மற்றும் நிறுவன பிரதிநிதிகளைச் சந்திக்கவுள்ளதாகத் தெரியவருகிறது.

இந்தச் சந்திப்பின்போது, விடுதலைப் புலிகளுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் தாக்குதல்களைத் தடுத்து நிறுத்துவதற்கு சர்வதேச நாடுகள் அழுத்தம் கொடுக்கவேண்டும் என விடுதலைப் புலிகள் வலியுறுத்தியிருப்பதாகவும், தடைப்பட்டுள்ள சமாதானப் பேச்சுக்களை மீள ஆரம்பிப்பதற்கு அரசாங்கம் தயக்கம் காட்டி வருவது குறித்து விளக்கமளிக்கவிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## கொழும்புத் துறைமுகத்தினுள் இரு இளைஞர்கள் கைது

கொழும்புத் துறைமுகத்தின் தடைசெய்யப்பட்ட கடற்பகுதியில் கண்ணாடி இழைப்படகில் இருந்த இரண்டு இளைஞர்கள் கடற்படையால் கைது செய்யப்பட்டதாக படைத் தலைமையகம் தெரிவித்துள்ளது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில், சுனில் றோகித பெரேரா மற்றும் சிறிஸ்காந்த பிரதீப்குமார ஆகிய இருவருமே கைது செய்யப்பட்டவர்களாவர்.

கடற்படையினர் தமது வழமையான ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தவேளை, குறித்த இரண்டு இளைஞர்களும் கண்ணாடி இழைப்படகில் தடைசெய்யப்பட்ட உயர்பாதுகாப்பு வலயப் பகுதியைக் கொண்ட கடற்பகுதியில் நின்றவேளை, இருவரும் கைது செய்யப்பட்டதுடன் - அவர்களது படகும் கடற்படையால் எடுத்துச் செல்லப்பட்டது.

இதனைத் தொடர்ந்து இவர்கள் இருவரும், அவர்களது படகும் அதற்குரிய வெளியிணைப்பு இயந்திரமும் மேலதிக விசாரணைகளுக்காக துறைமுகப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகப் படைத்தலைமையகம் மேலும் தெரிவித்துள்ளது.

## க.பொ.த.(உ/த) பாடங்களில் எந்த மாற்றமும் இல்லை!

### கல்வி அமைச்சு அறிவிப்பு

(கொழும்பு)

கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சைக்கான பாடங்களில், மாற்றம் ஏற்படுத்துவதற்கான தீர்மானம் எதுவும் எடுக்கப்படவில்லை என கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக சில பத்திரிகைகளில் வெளியான செய்திகளை கல்வி அமைச்சு மறுத்துள்ளது.

மாணவர்களின் பகுப்பாய்வுத் திறன் மற்றும் பிரச்சினைகளைத் தீர்க்கும் திறமை ஆகியவற்றை மதிப்பீடு செய்வதற்கு, கல்விப் பொதுத்தராதர உயர்தர மற்றும் சாதாரண தரப் பரீட்சைகளைப் பிரயோகிப்பது பற்றித் தீர்மானிப்பதற்கான பிரேரணைகளைச் சமர்ப்பிப்பதற்கு, ஜனாதிபதியால் ஆணைக்குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது.

தற்போதுள்ள மதிப்பீட்டுமுறையின் பயன் குறித்தும் இந்தக்குழு ஆராயும். இதேவேளை, பல்கலைக்கழகங்களில் மாணவர்களை அனுமதிப்பது தொடர்பாக மாற்றங்கள் எதுவும் செய்யப்படவில்லை என்று அமைச்சர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்தார்.

பல்கலைக்கழகங்களுக்கு அனுமதிக்கப்படும் மாணவர்களின் எண்ணிக்கையை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

## வாசகர் நோக்கு...

### சரசாலை வடக்குக்கும் மின்சாரம் கிடைக்குமா?

சாவகச்சேரி - சரசாலை வடக்குப் பகுதிக்கு இதுவரை இலங்கை மின்சாரசபையால் மின்சாரம் வழங்கப்படாது புறக்கணிக்கப்பட்டு வருவதால், சரசாலை வடக்கு மாணவராகிய நாம் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகிறோம்.

எமது கல்விச் செயற்பாட்டில் பெரும் பின்னடைவுகள் ஏற்படுகின்றமைக்கு இந்தப் பகுதிக்கு மின்சாரம் வழங்கப் படாமை முக்கிய காரணமாக அமைகிறது.

மேலும், தற்காலக் கல்விக் கொளகையின் மூலம், நவீன தொழில்நுட்பக் கல்வி முறையில் தொழில்நுட்ப சாதனங்கள் முக்கிய பங்குவகிக்கின்றன. இதற்கு மின்சாரம் அத்தியாவசியமாகும்.

இதன் காரணமாக எமது பிரதேச பாடசாலைகள் தொழில்நுட்ப வசதியற்று இருப்பதால், எமது பிரதேச மாணவர்கள் தமது பிரதேச பாடசாலையைவிட்டு - நகர்ப்புறப் பாடசாலையை நோக்கிச் செல்ல வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டுள்ளமையால், எமது கிராமம் மேலும் பின்தங்கிச் செல்வது தவிர்கக முடியாததாகும்.

ஆரம்ப காலங்களில் பின்தங்கிய கிராமங்களாகக் கருதப்பட்டவைக்குத் தற்போது மின்சாரம் வழங்கப்பட்டுள்ளமை வரவேற்கக்கூடிய விடயமாகும்.

எனினும், ஆரம்பகாலங்களில் மின்சாரம் வழங்கப்பட்டுவந்த பிரதேசங்களில் ஒன்றான எமது பிரதேசமும், தற்போது மின்சாரம் வழங்கப்படாது புறக்கணிக்கப்படுவது மனவருத்தத்துக்குரியது மட்டுமன்றி, எமது பிரதேசத்து மக்கள் தமது வாழ்க்கைத் தரத்தை உயர்த்த முடியாதநிலை காணப்படுகிறது.

ஆரம்பகாலங்களைப் போலன்றி, இப்போது மின்சாரசபைக்குத் தேவையான சகல வளங்களும் வழங்கப்பட்டுள்ளது என்பது அனைவருக்கும் தெரிந்த விடயமாகும்.

அவற்றைப் பிரயோகித்து சரசாலை வடக்குக்கு மின்சாரம் வழங்கப்படுவதன்மூலம், இந்தப்பகுதி மாணவர்களின் கல்விச் செயற்பாடுகளையும், மக்களின் வாழ்க்கைத் தரத்தையும் விருத்திபெறச் செய்யுமாறு - சரசாலை வடக்கு மாணவர்களாகிய நாம் மின்சார சபையினரைக் கேட்டுக் கொள்கிறோம்.

இது விடயத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்களும், கல்வி அதிகாரிகளும், சமூக நலன்விரும்பிகளும் கவனம் செலுத்தி, சரசாலை வடக்குப் பகுதிக்கு மின்சாரம் வழங்க உடன் நடவடிக்கை எடுக்கவேண்டுமென இந்தப் பகுதி மாணவர்கள் சார்பால் கேட்டுக் கொள்கின்றேன். (24)

*சரசால வடக்கு* *சுதாகரன்*

பகுதி 41

# காற்றே நீ எம் கதை கேளாயோ... அலையே நீ எம் நிலை உணராயோ...

சாங்கர்

அம்மா நீங்க கத்தாதீங்க என்னை மாமா கோயிலுக்கு மேல ஏத்தி தேவாரம தான் படிச்சவர். அதாலதான் தண்ணீ வடிஞ்சு அப்பாட்ட என்னக் குடுததவா். மாமா காப்பாத்தின மாதிரி உங்கள நான் காப்பாத்துவன் எண்டு.

அப்ப அவர் அங்க தேவாரமும் படிச்சிருக்காரு. அப்படி தேவாரம் படிச்சும் பயனில்லாமப் போச்சுது.

சிவர் இடியக்கயும் கடைக்க இருந்து அம்மாட்டச் சொல்லியிருக்காரு திரும்பிப் பாக்காதீங்கம்மா சிவா இடியுது. சிவசிவ சிவனே எண்டு சொல்லுங்கம்மா எண்டு. அம்மா சிவனே எண்டு சொல்லக்குள்ள சுழி மாதிரி வந்து கவுண்டு போச்சுது. இவங்க மூண்டு பேரும் வெளிய வந்துட்டாங்க. அவருக்கு மேல அப்படியே சிவர் விழுந்துச்சு. அப்படியே மூண்டா உடைச்சுத் தான் ஆளை வெளிய எடுத்தது. இல்லாட்டி பழுதாப் போன பிறகு தான் எடுக்க முடிஞ்சிருக்கும். அண்டைக்கே மூண்டு மணிக்கு நாங்கள் சவம் எடுத்திட்டம்.

முதல் நாளே பதினையாயிரம் ரூபாவுக்கு சாமான் வாங்கி வந்தவர். சமுர்த்தி வேலயோட கடையையும் வைச்சிருந்தவர். சூறாவளி வந்தா சனத்துக்கு சாமான் வேணுமே எண்டு பொலித்தீனும் ஒரு கட்டோட இறக்கினவரு. மழையெண்டாலும் வேணுமே எண்டு. கடையில் ஒரு சாமானும் எடுக்க ஏலாமப் போயித்துது. காசெல்லாம் இருந்தது. நகை காசெல்லாம் நான் மேல தொங்கக்குள்ள கிடைச்சது. அதையும் கைதவற விட்டுத்தன்.

இந்த அதிர்வில் இருந்து இவரும் இவரது பிள்ளைகளும் மீள நீண்ட காலம் எடுக்கும் எனப் புரிந்தது எனக்கு.

அடுத்து கடலில் தொழிலுக்குப் போன சமயம் தனது தந்தையையும வீட்டில் சகோதரனையும் இழந்த சசிதரன் (வயது 26) என்பவரைச் சந்தித்து உரையாடினேன்.

"நானும் அப்பாவும் கடலுக்குப் போறனாங்க. மூணு மணிக்கு விடியச் சாமம் பண்டித்தீவு எண்ட இடத்துக்குப் போன மாதிரி. சரியா அஞ்சு மணிக்கு தோணி ஏறினாங்க கடலுக்கு போன மாதிரி. வலை வச்சனாங்க. வலையப் புடிச்சித்து விடிஞ்சித்து. அதுக்குப் புறகு வலையை ஏத்தி றால் எல்லாம் கழத்திப் போட்டு பாத்தம் கரைதுப்பரவா தெரியேல்ல. அதுக்குப் புறகு வலையை கடகடெண்டு ஏத்திப் போட்டம். அடுத்த கடல் வாறது விளங்கித்து. அப்பாவும் நானும் வருவமெண்டு தோணியை ஏத்திட்டு வரக்குள்ள மேல இடையில வந்து அப்படியே தோணிய தாட்டு அப்பா அப்படியே போயித்தார். நான் நீந்தத் தெரிஞ்ச படியா தப்பினன். இல்லாட்டி நானும் இல்ல.

அதில ரெண்டு தோணியில நாங்க வந்தனாங்கள். மற்றதிலயும் அப்பனும் மகனும் தான். அதில அப்பன் காரன் தப்பீத்தார். மகன் போயித்தார்.

"உங்கட அப்பாவுக்கு வயசு?"

"அம்பத்தைஞ்சு"

"மற்றத் தோணியில...?"

"மற்றத் தோணியில தாண்டவர் தினேஸ். அப்பன்காறனுக்கு கோபால் - மற்றது எங்கட வீட்டில எங்கட தம்பியும்தான்."

"அவற்ற சம்பவம் என்ன மாதிரி?"

"அவர் வீட்டில இருந்தவர். அவருக்குக் கொஞ்சம் வருத்தம். நடக்கேலாது. இளம்பிள்ளைவாதம்"

"அவரக் காப்பாத்த ஒருத்தரும் வரயில்லையே?"

"இல்ல அவரக் காப்பாத்தப் போயிருந்தா எல்லாரும் போயிருப்பாங்க. அப்பிடியே வீட்டோட கொண்டு போயிட்டுது. பதினாறு நாளைக்குப் பிறகுதான் பொடியக் கண்டனாங்கள். காட்டில கிடந்தது."

"உங்கட வீட்டில இருந்து எவ்வளவு தூரம் வரும்?"

"வீட்டில இருந்து நூறு யார் வரும் பொடி கிடந்த இடம்"

"உங்கட வேற சொந்தக்காரர் ஆரும்...?"

"எங்கட மாமா அழகுதுரையெண்டு அவரும் கடலுக்குப் போய் வந்தமாதிரி. கரையப் போட்டும் தட்ட இறங்கித்து நடந்து போன மாதிரி. ஊருக்குப்போன கடல் வந்தோண்ண அவங்க ரெண்டுபேரையும் விழுத்தாட்டிக்கொண்டு போயித்து. நான் அதுக்கு முதல் தப்பி வந்து மரத்தில ஏறித்து இருந்தனான். கொஞ்ச நேரத்தால அப்பிடியே வந்து காட்டில ஏறினன்."

"உங்கட அப்பாட பொடி எடுத்ததா?"

"அப்பாட பொடி நாலு நாளைக்குப் பிறகு எடுத்தனாங்க. எடுத்து ஒண்டும் செய்யேலாத நிலையில இருந்தது. அதக் கடற்கரையில வெட்டித் தாட்டனாங்க. பிறகு அந்தப் பொடிய கல்லி உருட்டிக் கடல் எலும்புக்கூடா ஒதுக்கியிருந்தது. பதினாறு நாளைக்குப் பிறகு. அதப் பிறகு எடுத்து வேற இடத்ததாட்டனாங்க. எனக்கு நீந்தத் தெரிஞ்சபடியா தப்பினன். அப்பாக்கு நீந்துற பாஷையள் தெரியாது. அதாலதான் அவரு செத்தவரு."

தொடர்ந்து தனது மகள் கௌரி (வயது14), தங்கை அஜந்தா (வயது17), மைத்துனி தர்சினி (வயது26) ஆகிய மூவரையும் இழந்த நிர்மலா ஆறுமுகம் (வயது 35) என்பவர் தனது அனுபவங்களைக் கூறினார்.

"இவ எண்ட மூண்டாவது மகள. அவ அவங்கட அப்பம்மா வீட்ட நிண்டமாதிரி. பள்ளி லீவு மாதிரி. எங்கட தங்கச்சிக்காரியும், இவவும், மாமியுமா மூண்டு பேரும் போனமாதிரி, மூண்டுபேரும் இல்ல.

இதில எங்கட புள்ளயிடதும் தங்கைச்சிக்காரியிடதும் உடனேயே பொடி எடுத்தனாங்க. அவர்ட தங்கச்சியிடது பொடி அடுத்தநாள் பின்னேரம் தான் எடுத்து அடக்கம் செய்தனாங்க."

அடுத்து கடலுக்குத் தொழிலுக்குப் போனபோது நடந்த அவலங்களைத் தெரிவித்தார் இராமசாமி குணசேகரம் (வயது 30) என்ற தொழிலாளி.

"நாங்க காலையில மூண்டு நாலு மணிக்குப் போறது வழக்கம். அண்டைய தினம் அஞ்சு மணிக்குக் கடலுக்குப் போயித்தம். காலேல 9 மணிக்குக் கரையில இருந்தது மூண்டு கிலோமீற்றர் தூரத்தில நிண்டநாங்கள். முதல் அனர்த்தம் ஒண்டரைக் கிலோ மீற்றர் தூரத்தில அலை கரையப் போனது. மூண்டு போட்டும், தோணிகளுமா நூறு கடல்ல தொழில்



செஞ்சுகொண்டிருந்தது. அப்ப சதாசிவம் எண்டவர்தான் முதல் அலை கரைய நோக்கிப் போறதக் கண்டவர். கடல் பொங்கிக் கரைய போகுது. நாம என்னடா தொழில் செய்யிறது? ஏறுங்கடா போவம்" எண்டு சத்தம் போட்டார். நாம எல்லாப்போட்டும், தோணியும் சேந்து கரைய ஓடி வந்தம். ஒண்டரைக் கிலோ மீற்றர் அளவில் கரைய வந்திட்டம். பின்னுக்கு ஒரு பெரிய அலை எழும்பி வந்துச்சு. அது போட், தோணி எல்லாம் அடிச்சு, உடைச்சு, நொருக்கி ஒதுக்கி கரைக்குப்போகுது. அப்ப நாங்க திருப்பி எடுத்து மேற்கடலால எந்த ஊருக்கெண்டாலும் கரை போவம் எண்டு போகப் போற இடம் எல்லாம இதே அனர்த்தம். இதமாதிரித்தான் அலைபொங்குது. அப்ப திரும்பிச் சுத்திட்டு வாகரைக் கடலுக்குத் தான் ஓடியந்தம். மூண்டு மணித்தியாலத்துக்குப் பிறகு கரைப்பட்டிட்டம். "பூமில கால்வைக்க இறைவா விடு" எண்ட வரத்தில கரைப்பட்டுப் போட்டு, வலை எல்லாத்தையும் விட்டுத்து ஓடிவர அதெல்லாம் அப்பிடியே உடைஞ்சு நொருங்கிப் போயித்து. இப்ப தொழிலில்லாமல் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறம்.

இப்ப பதிஞ்சு கொண்டிருக்கிறாங்கள். 198 பதிவு பதிஞ்சி எடுத்துப் போறாங்கள். ஆனா ஒரு வீச்சு வலைகூடக் கிடைச்சதில்ல"

இந்த அனர்த்தத்தில் உயிரிழந்தோரில் அம்பாறை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் குயிலின்பனின் தந்தையார் சவரிமுத்து தம்பிராசாவும் ஒருவர். ஆனால், தந்தையாரின் இறுதிக் கிரியைகளில் பங்குபற்ற முடியாத நிலை குயிலின்பனுக்கு இருந்தது. அம்பாறை மாவட்டத்தில் பாதிக்கப்பட்ட மக்களின் தேவைகளைக் கவனிப்பதற்காக அவர் அங்கேயே நின்றார். 41ஆம் நாள் வைபவத்திலேயே இவரால் பங்குபற்ற முடிந்தது.

குயிலின்பனின் தாயாரைக் கண்ட போது அவர் தனது அனுபவங்களைப் பகிர்ந்துகொண்டார்.

"அந்த நேரம் புட்டவிச்சுக் கொண்டிருந்தன். எண்ட மகன் உதயகுமார் ஓடி வந்து மேசையில ஏறம்மா எண்டார். ஆமி வந்தா மேசையில எண்ணத்துக்கு ஏற எண்டு கேக்க அவர் கடல் பொங்கி வருகுது ஏறம்மா எண்டார். நான் மேசையில ஏற ஓட்டைப் பிரிச்சு எண்ட கையப் புடிச்சு இழுத்து என்ன மேல எடுத்து ஏத்தினார். அப்ப தண்ணியில ஒரு தாயும் புள்ளயும் வர இதப்புடிங்கம்மா எண்டு அவர் அவங்களையும் தந்தார். அப்ப நான் முகட்டில் இருந்து எண்ட மகள் உதயமலர் எங்கப்பா எண்டு கத்தினன். மகன் ஓடுற புள்ளகள் இறக்கிறதும் தாறதுமா இருந்தார். அவனிட்ட அக்காச்சியவ கோயிலுக்குப் போனவ காணல்ல மகனே! என்னை இறக்கி விட்டடா நானும் சாகப் போறன் எண்டு கத்தக் கடைசியில ஒரு மாதிரி இறக்கிவிட்டார்.

( தொடரும்... )

கல்வியியல்

# ஆசிரிய சேவையிலுள்ளவர்களுக்கான உரிமைகளும் சலுகைகளும்

ஆர்.கே. மேனன்

இலங்கையில் அரசாங்க சேவையில் உள்ளடக்கப்படும் ஆளணி வளங்களில் மிகக்கூடிய அளவான ஆளணி வளங்களை உள்ளடக்கிய ஒரு சேவை ஆசிரியசேவையாகும்.

இது கல்வி அமைச்சு, மாகாணக் கல்வி அமைச்சு, மாவட்ட மேலதிக கல்விப் பணிப்பாளர், வலயக் கல்விப் பணிப்பாளர், கோட்டக் கல்விப் பணிப்பாளர், அதிபர் என்னும் கட்டமைப்புகளுக்கூடாக இந்த ஆசிரிய சேவையானது தொழிற்படுகிறது.

காலத்துக்குக் காலம் மாறி வரும் கல்வி முறைமைகளாலும், உள்ளீட்டிற்கேற்ற வெளியீட்டை உடனடியாக அறியமுடியாத தன்மையாலும் இந்தக் கல்வி கட்டமைப்புக்குள் உள்ளடக்கப்படும் ஆசிரிய சேவையில் பல முறைமை மாற்றங்கள் ஏற்பட்டுக்கொண்டு வருகின்றது.

இதில் ஆசிரியர்களுக்கென்று உரிமைகள், சலுகைகள் என்று பல வகையான அம்சங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. இது பற்றிய சரியான விளக்கங்கள் பல கல்வியியல் சமூகங்களுக்குத் தெரியாத காரணத்தால் தான் பெறப்படவேண்டிய உரிமைகளும், வழங்கப்பட வேண்டிய சலுகைகளும் மறுக்கப்பட்டு சில முரண்பாட்டுப் பிரச்சினைகள் ஆசிரியர்களுக்கும், அதிபர் உட்பட்ட பல அதிகாரிகளுக்கு இடையில் ஏற்பட்டுக் கொண்டு வருகிறது. இதனால் இது பற்றிய ஒரு தெளிவு கல்வியியல் சமூகத்துக்குத் தேவை என்பதை மறுக்க முடியாத ஒன்றாக இருக்கிறது.

இங்கு ஓர் ஆசிரியருக்கு உரிய **உரிமைகள் என்பது** யாதெனில் - ஓர் ஆசிரியர் தனது கடமைகளைச் சரிவரச் செய்தபின் திணைக்களத் தலைவரால் மறுக்கப்பட முடியாதவை உரிமைகளாகும்.

**சலுகைகள் என்பது** - ஆசிரியர்களுக்கு அவர்களின் உரிமைகளுக்கு மேலாக மேலும் சில வசதிகள் செய்து கொடுப்பதாகும்.

ஆசிரியர் தமது கடமைகளைச் சரியாகச் செய்த பின்னரும், திணைக்களத் தலைவரின அனுமதியுடன் பெறவேண்டியவை சலுகைகள் ஆகும். எனினும் ஸ்தாபனச சேவையில் குறிப்பிட்டுள்ள எந்தச் சலுகைகளையும் திணைக்களத் தலைவர்கள் மறுக்கும் சந்தர்ப்பத்தில் ஆசிரியர்களின் கண்டனத்துக்கு உள்ளாகி, தனிமைப்படுத்தப்பட்டு ஆசிரியர்களின் ஒத்துழைப்பை இழப்பது பல பாடசாலைகளில் நடக்கின்ற ஒரு விடயமாகும்.

## ஆசிரியர்களின் உரிமைகள்

### 1. வேதனம்

ஆசிரியர் தமது கடமையை முடித்து மாதாமாதம் 20 ஆம் திகதி தமக்குரிய வேதனத்தைப் பெறுவார். இந்த நாள் லீவு நாளாயின் அடுத்த வேலை நாளில் வேதனத்தைப் பெறும் உரிமைகள் உடையவராவார். இதைத் தடுக்கவோ அல்லது நிறுத்தவோ அல்லது தாமதிக்கவோ எந்த அதிகாரிகளுக்கும் உரிமையில்லை.

2. வருடாந்த சம்பள உயர்ச்சி என்பது கடமையைப் பூர்த்தி செய்த அனைவருக்கும் உரித்துடையது. இது பின்வரும் திகதிகளின் அடிப்படையில் கணிப்பிடப்படும்.

**முதல் நியமனத் திகதி**
**பயிற்சிச் சான்றிதழ் திகதி**
**பட்டச் சான்றிதழ் திகதி**
**பதவி உயர்வு பெற்ற திகதி**

இதைத் தடுப்பது, தாமதிப்பது, மறுப்பது என்பது திணைக்களத் தலைவருக்கு தகுந்த நடவடிக்கை எடுக்கும் பட்சத்தில், மிகவும் சிக்கலுக்கு உரியதொன்று. ஒழுக்காறு சம்பந்தமாக வருடாந்த உயர்ச்சியை திணைக்களத்தலைவர். நிறுத்தினாலும் கூட, இந்த ஒழுக்காறு சம்பந்தமான விளக்க அறிக்கை வந்த பின்பு இந்தச் சம்பள உயர்ச்சியை நடைமுறைப்படுத்த வேண்டும்.

உச்ச வேதனத்தைப் பெறுவதால் அல்லது ஒழுக்காற்று நடவடிக்கைகளால் இதைத் தடுக்கும் அதிகாரம் திணைக்களத் தலைவருக்கு இருக்கலாம். ஆனால் 01-01-1994 ஆம் ஆண்டுக்குப் பின்னர் உச்ச வேதனத்தைப் பெறுபவர்களும் வருடாந்த தேக்க நிலைப்படியாக சம்பள உயர்ச்சி பெறலாம்.

**ஓய்வூதியம்**

இது 55 வயதை அடையும் திகதியன்று இதைப் பெறலாம். இந்த ஓய்வு பெறுதல் ஆனது 60 வயது நீடிப்பையும் பெறலாம், 55 வயதை அடையும் முன்னரும் தகுந்த காரணத்துக்காகப் பெறலாம். 20 வருட சேவையை முடித்திருத்தல் வேண்டும்.ஆனால் 55 வயதுக்குப் பின்னரே ஓய்வூதியப் படியைப் பெறலாம். இது 2003 ஆம் ஆண்டு நியமனத்தின் பின் நிறுத்தப்பட்டு சி.பி.எவ் ஒரு திட்டம் கொண்டு வரப்பட்டுள்ளது.

**விதவை/ தபுதாரன்/ அநாதைகள் ஓய்வூதியம்** - சேவையின் போது அல்லது ஓய்வு பெற்ற பின் ஒரு ஆசிரியர் மரணமடைவாராயின் அவரின் (விதவை / தபுதாரன்/ அநாதைப் பிள்ளைகள்) ஆசிரியருக்குரிய ஓய்வூதியத்தைப் பெறும் உரிமை உடையவராவார்.

அரச ஊழியரின் பிள்ளை ஒன்று ஊனமுற்றிருப்பின் அந்தப் பிள்ளை தான் உயிர்வாழும் காலம் வரை தந்தை அல்லது தாயின் (இருவரும் ஓய்வூதியம் பெறுவர்களாயின் எவரது ஓய்வூதியம் கூடியதோ அதனை) ஓய்வூதியத்தை பெறலாம்.

(தொடரும்....)

# தவக்கால நற்சிந்தனை

"பிறர் உங்களுக்குச் செய்யவேண்டும் என விரும்புகிறவற்றையெல்லாம், நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள்" (மத் . 7:12)



என்னை யாரும் மதிக்கவில்லை, எனக்கு ஒருவரும் உதவவில்லை, என்னை யாரும் விசாரிக்க வரவில்லை என்று நமக்குக் கிடைக்காத காரியங்களுக்காகப் பிறரை வசைபாடும் நாம், பிறரை நேசிக்கிறோமா? மற்றவர்களை உண்மையிலேயே மதிக்கிறோமா? அல்லது மிதிக்கிறோமா? மற்றவர்களைத் தேடிச்சென்று விசாரிக்கிறோமா? நமக்குப் பிறரிடமிருந்து கிடைக்காமல்போனவைகளுக்காகக் கவலைப்படும் நாம், பிறருக்கு நாம் கொடுக்காமல் போனவைகளுக்காக என்றைக்காவது கவலைப்பட்டிருக்கிறோமா? பிறர் பாவங்களை நாம் மன்னித்தால்தான், நம் பாவங்களைப் பிதா மன்னிப்பேன் என்கிறார். அதுபோலத்தான் மற்றவர்கள் நமக்குச் செய்யும்போதுதான், நமக்கும் உதவிகிடைக்கும் என்பதை நமக்கு உணர்த்தவே —"கொடுங்கள் உங்களுக்குக் கொடுக்கப்படும் என்றார். பிறர் நம்மைக் குறைகூறக் கூடாது, குற்றம் காணக் கூடாது என்று குறைப்படும் நாம், பிறரைக் காரணமின்றிக் குறைகூறுவது எந்த விதத்தில் நியாயம்? சிந்திப்போம்! திருந்துவோம்.

= மோ.தார்சீசியஸ் =

### கார்க் குண்டுத் தாக்குதலில் பலியான

# லெபனான் முன்னாள் பிரதமரின் இறுதிச் சடங்குகள் நடைபெற்றன



லெபனானில் கார்க் குண்டுத் தாக்குதலில் கொல்லப்பட்ட முன்னாள் பிரதமர் ரபீக் ஹரீரியின் இறுதிச் சடங்கில் கலந்துகொள்வதற்காக நேற்றைய தினம் பல்லாயிரக் கணக்கான ஆதரவாளர்கள் மற்றும் உலக பிரதிநிதிகள் கலந்துகொண்டதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

நேற்றைய இறுதிச் சடங்கில் கலந்து கொள்வதற்காக பிரான்ஸ் ஜனாதிபதி ஜக்சிராக், அமெரிக்க இராஜாங்க உதவிச் செயலர் வில்லியம் பேர்ஸ் ஆகியோர் லெபனாக்குச் சென்றனர்.

முன்னாள் பிரதமரின் ஆதரவாளர்கள் வீதிகளில் லெபனானின் தேசியக் கொடியை ஏந்தியவாறு சிரியாவிற்கு எதிராக கோஷங்களை எழுப்பிய வண்ணமிருந்தனர். இதில் நாம் உண்மையை பேசவே விரும்புகின்றோம். எமது நிலத்திலிருந்து சிரியப் படைகள் உடனடியாக வெளியேற வேண்டுமெனத் தெரிவித்தனர். அத்துடன் ஒரு குழுவினர் சிரிய பணியாளர்கள் மீதும் தாக்குதல்களை நடத்தினர்.

இதேவேளை அமெரிக்காவுக்கான சிரியத் தூதுவரை அழைத்த அமெரிக்கா, இந்தக் குண்டு வெடிப்புத் தொடர்பாக தனது கடும் கண்டனத்தை தெரிவித்துள்ளது. இது தொடர்பாக அமெரிக்க இராஜாங்கச் செயலர் கொண்டோ லீசா ரைஸ் நிருபர்களிடம் தெரிவிக்கையில் –

இந்தக் கார்க் குண்டுத் தாக்குதல் தொடர்பாக ஐ.நாவுடன் கலந்துரையாடப்பட்டுள்ளது. அமெரிக்கா, ஐ.நாவிடம் தெரிவித்த முறைப்பாடு தொடர்பாக இராஜதந்திர ரீதியிலான தடைகளை சிரியா மீது விதிப்பது குறித்து ஐ.நா.ஆலோசித்து வருகின்றது.

அத்துடன் சிரியப் படைகள் லெபனானில் நிற்பது லெபனானின் ஸ்திரத் தன்மையை குலைப்பதற்கேயாகும். எனவே, சிரியா மீது தாக்குதல் நடத்துவதை நான் குறைகூறவில்லை எனத் தெரிவித்தார்.

இதேவேளை இந்தக் குண்டுத் தாக்குதலை ஐ.நாவும் கண்டித்துள்ளது. அத்துடன், லெபனானிலுள்ள 14000 சிரிய படையினரும் விலக்கப்படவேண்டுமென ஐ.நா.செயலர் கொபி அனான் சிரியாவிடம் கேட்டுக் கொணடார்.

முன்னாள் பிரதமர் ஹரீரி, கொல்லப்பட்டமையானது தற்கொலைத் தாக்குதல் மூலம்தானென லெபனான் உள்துறை அமைச்சு தெரிவித்துள்ளது. இதேவேளை இந்தத் தாக் குதல் மூலம் லெபனானில் உள்நாட்டு யுத்தம் மூளக்கூடிய சாத்தியங்கள் உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.




# தியேட்டோ உடன்படிக்கை 7 ஆண்டுகளின் பின் அமுல்

பூமி உஷ்ணமடைவதைக் குறைக்கும் நோக்கில் ஏற்படுத்தப்பட்ட தியேட்டோ உடன்படிக்கை இணக்கம் காணப்பட்டு ஏழு ஆண்டுகளின் பின்னர் அமுலுக்கு வந்துள்ளது.

பச்சை வீட்டு வாயுத்தாக்கத்தை – ஐம்பது வீதத்திற்கு பரவக் காரணமான 141 நாடுகள் தியேட்டோ உடன்படிக்கையை அங்கீகரித்துள்ளன. இதற்கமைய 2012 ஆம் ஆண்டளவில் பச்சை வீட்டுவிளைவை 5.2 வீதத்தால் குறைக்க இணக்கம் காணப்பட் டுள்ளது.

பொருளாதார காரணங்களை முன்னிறுத்தி அமெரிக்காவும், அவுஸ்ரேலியாவும் இந்த உடன்படிக்கையை தவிர்த்துள்ளன. சீனா மற்றும் இந்தியா போன்ற வள்ர்முக நாடுகளும் இதில் கலந்துகொள்ளவில்லை.

இந்த உடன்படிக்கை அமுலுக்கு வருவதை முன்னிட்டு பிரதான நிகழ்வு ஜப்பானின் கியோட்டோ நகரில் நடைபெறவுள்ளது. கடந்த வருடம் நவம்பரில் உடன்படிக்கையை அங்கீகரிக்க ரஷ்யா எடுத்த தீர்மானகரமான முடிவினை அடுத்து 90 நாட்களின் பின்னர் இந்த உடன்படிக்கை அமுலுக்கு வந்துள்ளது.

ரஷ்யாவின் அங்கீகாரம் இந்த உடன்படிக்கைக்கு கிடைக்கப்பெற்றது முதல், இதன் அமுலாக்கத்துக்கு அவசியமான 55 வீத பச்சை வீட்டு தாக்கத்திற்குள்ளான நாடுகளின் ஆதரவு கிடைத்துள்ளது.

இந்த உடன்படிக்கையை வரவேற்றுள்ள ஜப்பான் பிரதமர் ஜினிசிரோ கொய்சுமி இந்த உடன்படிக்கையில் கையொப்பமிடாத ஏனைய நாடுகள் தமது முடிவினை மீள் பரிசீலனை செய்யவேண்டுமெனவும் தெரிவித்துள்ளார்.

# ஈராக் பிரதமருக்கான வேட்பாளராக ஷியா கூட்டணியால் ஜபாரி தெரிவு!

ஈராக்கிய தேர்தலில் ஐம்பது வீத வாக்குகளைப் பெற்று வெற்றிபெற்ற ஈராக்கிய ஐக்கிய முன்னணி கூட்டணி தமது முன்னணியிலுள்ள டாவா கட்சியைச் சேர்ந்த இப்ராஹிம் ஜபாரியை பிரதமருக்கான வேட்பாளராகத் தெரிவு செய்துள்ளது.

புதிய அரசாங்கத்தை அமைப்பதற்கான பணிகள் தற்போது நடைபெற்றுவருகின்ற போதிலும், நிர்வாக கட்டமைப்பொன்றை ஏற்படுத்துவதற்கு நீண்டநாட்கள் எடுக்குமென தெரிவிக்கப்படுகிறது.

பிரதமருக்கான வேட்பாளராக தெரிவு செய்யப்பட்டுள்ள ஜபாரி தற்போதுள்ள இடைக்கால அரசாங்கத்தில் இரண்டு உப ஜனாதிபதிகளில் ஒருவராக உள்ளார்.

ஈராக்கிய தேர்தலில் வெற்றி பெற்றால் நாம் ஈராக்கியர்களாகவே ஆட்சி செய்வோம். ஷியாக்களாக அல்லவெனவும் சகல சமூகத்தையும் ஒன்றிணைத்து எமது அரசாங்கம் அமையுமெனவும் ஈராக்கிய தேர்தலுக்கு முன்னர் ஜபாரி செய்தி நிறுவனமொன்றுக்குத் தெரிவித்திருந்தார்.

சதாம்ஹுசைன் ஆட்சி அகற்றப்பட்ட பின்னர் வெளிநாடுகளில் தங்கியிருந்த ஈராக்கியர்களில் முதன்முதல் நாடு திரும்பியவர் ஜபாரி என்பதும் குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, ஈராக்கின் தேர்தல் முடிவுகள் அமெரிக்காவிற்குப் பலத்த ஏமாற்றத்தை அளித்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஐக்கிய ஈராக்கிய கூட்டணிக் கட்சியும், அதோடு கூட்டுச் சேர்ந்து ஆட்சி அமைக்க இருக்கும் குர்திஷ்கான் கட்சியும் ஈரான் நாட்டுடன் நெருங்கிய தொடர்புகொண்ட கட்சிகள் ஆகும்.

அமெரிக்க ஆதரவுபெற்ற பிரதமர் அலாவியின் கட்சியால் 3 ஆவது இடத்தைத்தான் பிடிக்கமுடிந்தது. இதனால் ஈராக்கில் அமெரிக்காவின் செல்வாக்கு நீண்டகாலம் நிலைக்காது.






ஈரான் அணு ஆயுதம் தயாரிக்க முயற்சி செய்துவருவதாக அமெரிக்கா குற்றஞ்சாட்டுவதால் இரு நாடுகளுக்கும் இடையே காழ்ப்புணர்ச்சி ஏற்பட்டுள்ளது.

ஈரானை நட்பு நாடாக புதிய ஈராக் அரசு கருதுமானால் அது ஈரானை தன் வழிக்குக் கொண்டுவர நினைக்கும் அமெரிக்காவுக்கு மிகப் பெரிய தடைக்கல்லாக அமையும்.

இதனால், சதாம்ஹுசைனை ஆட்சியில் இருந்து அகற்ற பெரும் பணம் செலவழித்த அமெரிக்காவுக்கு ஈராக் தேர்தல்முடிவு பெரும் தலை வலியைத்தான் கொடுத்துள்ளது.

# மீண்டும் தாக்குதல் நடத்துவதற்கு அல்கொய்டா திட்டமிட்டுள்ளதாம்

## எச்சரிக்கிறது ஐ.நா.

கடந்த 3 ஆண்டுகளுக்கு முன்பு பின்லேடனின் அல்கொய்டா இயக்கத்தினர் விமானங்களை மோதி நியூ யோர்க்கில் உள்ள உலக வர்த்தக மைய கட்டடத்தை தகர்த்தனர். 5 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் இதில் பலியானார்கள். இதை அடுத்து பின்லேடனுக்கு அடைக்கலம் கொடுத்த ஆப்கானிஸ்தான் மீது அமெரிக்கா படையெடுத்து அங்கு தலிபான் ஆட்சியை அகற்றியது. பின்பு கர்சாய் தலைமையில் புதிய அரசு அமைந்தது.

ஆனாலும் அல்கொய்டா தீவிரவாதி களை முற்றிலுமாக ஒழிக்க முடிவில்லை. அல்கொய்டா தீவிரவாத நடவடிக்கைகள் தொடர்பாக ஐக்கிய நாடுகளைச் சேர்ந்த பிரதிநிதிகளை கொண்ட குழு விசாரணை நடத்தி தனது அறிக்கையை தாக்கல் செய்துள்ளது. அதில் கூறியிருப்பதாவது:-

அல்கொய்டா தீவிரவாதிகளின் பலம் எந்த வகையிலும் இன்னும் குறையவில்லை. அந்த அமைப்புக்கு பொருளாதார நெருக்கடி ஏற்படுத்துவதாலோ, தடை விதிப்பதாலோ அவர்களது நடவடிக்கைகளை கட்டுப்படுத்தி விட முடியாது.

பேரழிவை ஏற்படுத்தும் இரசாயன ஆயுதங்கள், உயிரியல் ஆயுதங்கள், அணு ஆயுதங்கள் ஆகியவற்றை எளிதில் தயாரிக்கும் வசதி அவர்களுக்கு இருக்கிறது.



மீண்டும் மிகப்பெரிய அளவில் அவர்களால் தாக்குதல் நடத்த முடியும். எங்கே எப்போது என்பதுதான் கேள்வி. உலக நாடுகளுக்கு அல்கொய்டா அமைப்பு தொடர்ந்து அச்சுறுத்தலாகவே இருக்கும்.

ஆப்கானிஸ்தானில் தலிபான்களின் பலமும் விரைவிலேயே அதிகரித்துவிடும். ஆப்கானிஸ்தானை மீண்டும் தங்கள் தளமாகப் பயன்படுத்திக்கொள்ள அல்கொய்டா திட்டமிட்டுள்ளது. அல்கொய்டா ஆதரவுடன் தலிபான்கள் மீண்டும் ஆப்கானிஸ்தானில் ஆதிக்கம் செலுத்த திட்ட மிட்டுள்ளதாக அந்த அறிக்கை



ஈராக்கின் மொசூல் நகரில் நேற்று அமெரிக்க இராணுவத் தொடரணி மீது நடத்தப்பட்ட வீதியோர குண்டுத் தாக்குதலில் அமெரிக்க இராணுவத் தொடரணி தப்பியது. ஆனால் அவ் வீதிவழியால் வந்த பொதுமக்களின் கார் குண்டுத்தாக்குதலில் சிக்கி தீப்பற்றி எரிவதைக் காணலாம்.

# காஷ்மீர் ஊடாக பஸ்சேவைக்கு இந்தியா – பாகிஸ்தான் இணக்கம்

இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையே பஸ் சேவையை ஆரம்பிப்பதற்கு இணக்கம் காணப்பட்டுள்ளது.

இரண்டு நாடுகளதும் பிரச்சினைக்குரிய காஷ்மீர் மாநிலத்தின் எல்லைப் பகுதி ஊடாக இந்த பஸ் சேவையை நடத்துவதற்கு இரு நாட்டு வெளியுறவு அமைச்சர்களும் இணங்கியுள்ளனர்.

பாகிஸ்தான் சென்றுள்ள இந்திய வெளியுறவு அமைச்சர் நட்வர்சிங் இஸ்லாமாபாத்தில் பாகிஸ்தான் வெளியுறவு அமைச்சர் குர்திஷ் கசூரியை நேற்று சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியபோதே இந்த இணக்கம் காணப்பட்டுள்ளது.

அத்துடன் இரு நாடுகளுக்குமிடையில் அணுவாயுத மோதல்கள் இடம்பெறுவதை முற்றுமுழுதாக தடுப்பதற்கான பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதற்கும் இரண்டு நாட்டு வெளியுறவு அமைச்சர்களும் இணங்கியுள்ளனர்.

இருநாட்டு வெளியுறவு அமைச்சுக்களின் இந்த இணக்கப்பாடுகள் சமாதான முயற்சிகளில் முன்னேற்றத்தை ஏற்படுத்துமென தெரிவிக்கப்படுகிறது.

# தாய்லாந்தில் குண்டுத் தாக்குதல்




தாய்லாந்தில் நேற்று 2 இடங்களில் குண்டு வெடித்தது. நராதி வாத் மாகாணத்தில் ராநாகி மாவட்டத்தில் வங்கி அருகே நிறுத்தப்பட்டிருந்த லொறியில் தீடீரென்று குண்டு வெடித்தது. அதேபோல் ரீசோ மாவட்டத்தில் இறப்பர் தோட்டம் அருகேயும் தீடீரென்று குண்டு வெடித்தது. இந்தக் குண்டு வெடிப்புக்களில் 6 பேர் காயம் அடைந்தனர்.

தாய்லாந்தில் பிரதமர் தக்சின் ஷினேவத்ரா இந்த பகுதியில் சுற்றுப் பயணம் செய்யவும் புத்தமத தலைவர்களுடனும் முஸ்லிம் தலைவர்களுடனும் பேச்சு நடத்த திட்டமிட்டிருந்தார். அவரைக் கொலை செய்யும் நோக்கத்துடன் இந்த சதித் திட்டம் தீட்டப்பட்டுள்ளது. எனினும் அவர் வருவதற்கு சில மணி நேரத்துக்குமுன் குண்டுகள் வெடித்துவிட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

# அணுஆயுதம் இல்லை தென்கொரியா தெரிவிப்பு!

வடகொரியா தன்னிடம் அணு ஆயுதம் இருப்பதாக ஒப்புக்கொண்ட போதிலும் அதை அணு ஆயுத நாடாக ஏற்றுக்கொள்ளமுடியாது என்று தென்கொரிய அமைச்சர் சங் டோங் யங் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறியதாவது –

வடகொரியா அணு ஆயுத சோதனை நடத்தியதற்கு எந்த ஆதாரமும் இல்லை. வடகொரியாவிடம் அணு ஆயுதம் இருப்பதாக முடிவுக்கு வருவது சரியல்ல. வடகொரியாவிடம் 10 முதல் 14 கிலோ புளுட்டோனியம் இருப்பது உண்மைதான். ஆனால் அதை புளுட்டோனியம் குண்டுகளாக மாற்றியதற்கு எந்த ஆதாரமும். இல்லை.

பேச்சுவார்த்தையில் தன்நிலையை வலுப்படுத்திக்கொள்வதற்காகவே அது அணு ஆயுதம் இருப்பதாக அறிவித்துள்ளதாக கொரிய அமைச்சர் சுங் டோங் யங் கூறினார்.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# தனது அலுவலக உதவியாளரை தாக்கினார் அமைச்சர் டக்ளஸ்!

## எதிர்ப்புத் தெரிவித்து இன்று மகஜர் கையளிப்பு

தனது அமைச்சில் பணியாற்றும் செயலாளரின் உதவியாளரை தாக்கியதாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மீது குற்றம் சாட்டப்பட்டிருக்கிறது.

இந்தச் சம்பவத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து அமைச்சின் ஊழியர்கள் ஆட்சேப மனுவொன்றை அமைச்சின் செயலாளரிடம் கையளிக்கவுள்ளதாக தெரியவருகிறது.

அமைச்சில் பணியாற்றும் நூறு பேரின் கையொப்பங்களை இந்த மகஜரில் பெறுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமைச்சில் பணியாற்றும் யு.ஜி பந்துல எனப்படும் ஊழியரை அவருக்கே தெரியாத காரணம் கூறப்பட்டு அமைச்சர் தாக்கியதாக இந்த முறைப்பாட்டுக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இது குறித்து ஊழியர்கள் கருத்துத் தெரிவிக்கையில் -

இது வரைகாலமும் அமைச்சு ஒன்றின் ஊழியர் அமைச்சராலோ அல்லது அரசியல்வாதி ஒருவராலோ தாக்கப்பட்டதை நாம் அறிந்திருக்கவில்லை.

இந்த நிலையில், இன்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மேற்கொண்ட நடவடிக்கையானது, ஜனநாயக வரம்புகளை மீறுவது மாத்திரமல்லாமல் மனிதஉரிமை மீறலுமாகும்.


சாதாரணமாக அரச ஊழியர் ஒருவர் தவறு செய்வாராக இருந்தால், அதற்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கையை மேற்கொள்வதே நடைமுறையாகும். எனினும், இதனை மறுக்கும் வகையில் அமைச்சர் நடந்துகொண்டமையால் தமக்குப் பயம் ஏற்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளனர்.

இதற்குத் தகுந்த நடவடிக்கை எடுக்கவேண்டும். அல்லது உரிய இடமாற்றங்களை வழங்க வேண்டும் என அமைச்சின் செயலாளரிடம் கோரியுள்ளதாக மேலும் குறிப்பிட்டுள்ளனர்.

இந்தக் கோரிக்கைக் கடிதத்தின் பிரதிகள் ஜனாதிபதி, பிரதமர், எதிர்க்கட்சித் தலைவர், பொது நிர்வாக அமைச்சர் உட்பட்டோருக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

# எரிபொருள் கடை தீயினால் நாசம்!

## நேற்றிரவு நகரில் சம்பவம்



யாழ்ப்பாணம் - பருத்தித்துறை வீதியில் ஆரியகுளத்திற்கு சமீபமாக உள்ள எரிபொருள் நிரப்பு நிலையம் நேற்று நள்ளிரவு இடம்பெற்ற தீ விபத்தினால் முற்றாக எரிந்து நாசமாகியது.

உரிமையாளர் கடையைப் பூட்டுவதற்கு ஆயத்தமான வேளை மோட்டார் சைக்கிளுக்கு பெற்றோல் வாங்குவதற்கு வந்தவர்களுக்கு மெழுகுவர்த்தி கொழுத்தி வைத்துக்கொண்டு பெற்றோலினை அளந்தவேளை எதிர்பாராத விதமாக தீப்பற்றியுள்ளது.

தீ பரவாது தடுப்பதற்கு எடுத்த முயற்சி பலனளிக்காத நிலையில் கடையினுள் இருந்த எரிபொருள்கள் அனைத்தும் எரிந்து நாசமாகின எனினும் கடையின் உரிமையாளர் தெய்வாதீனமானக உயிர் தப்பினார்.

எரிபொருள் விற்பனை நிலையத்திற்கு மேலாக சென்ற மின்சார வயர்களில் தீப்பிடித்ததில் யாழ். நகரின சில பகுதிகளில் மின் தடை ஏற்பட்டதாகவும் தெரியவருகிறது.

## ஐ.நா.வுக்கு...

தேசிய பிக்குகள் முன்னணி, ஜாதிக ஹெல உறுமய, தேசப்பற்று தேசிய இயக்கம் போன்ற பல்வேறு பேரினவாத அமைப்புக்களின் பின்னணியில் ஜே.வி.பி உள்ளிட்ட அரசாங்க அமைச்சர்கள் சிலரே இருந்து கொண்டு இந்தப் போராட்டங்களை நடத்தி வருவதாகவும் தெரியவருகிறது.

ஐ.நா.செயலாளரின் கண்டனம் குறித்து அரசாங்கத் தரப்பால் நேரடியாக எதிர்ப்புத் தெரிவிக்கமுடியாத நிலையிலேயே - இவ்வாறு ஐ.நா.வுக்கு எதிராக பேரினவாத இயக்கங்களைக்கொண்டு எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை நடத்திவருவதாகவும் தெரியவருகிறது.

ஐ.நா மற்றும் அதன் வதிவிடப் பிரதிநிதிகளை இலக்குவைத்து நடத்தப்படும் இந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களால் வெளிநாட்டு இராஜதந்திர வட்டாரங்கள் அதிருப்தி கொண்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## கல்முனை

ஜெனிற்றாவும் தந்தை ஜெயராஜாவும் மிகுந்த மகிழ்ச்சியுடன் கல்முனை நீதிமன்றத்தில் ஆஜராகியிருந்தனா.

4 மாதங்கள் முடிவடைந்து ஐந்தாவது மாதத்தினுள் காலடி வைககும் அபிலாஷ் (பேபி-81) என்ற குழுந்தையை நீதிமன்றப் பதிவாளர் எம்.எஸ்.எம் நசீர் கல்முனை வைத்தியசாலியிலிருந்து வந்திருந்த டொக்டர் கோபால் முகுந்தனிடமிருந்து பெற்றுக்கொண்டார்.

மாவட்ட நீதிவான் எம்.பி. மொஹிதீன் 22 பக்கங்கள் கொண்ட இறுதித்தீர்ப்பை வாசித்த பின்னர் குழந்தையைப் பெற்றோரிடம் வைபவரீதியாக ஒப்படைத்தார்.

ஏராளமான ஊடகவியலாளர்கள் நிறைந்திருந்த அவ்விடத்தில் ஆனந்தக்கண்ணீருடன் பெற்றோர் இந்தக் குழந்தையைப் பொறுப்பேற்று அபிலாஷ் என்று பெயரிட்டனர்.

குழந்தை கையில் கிடைத்ததும் தாயார் ஆயிரக்கணக்கான முத்தங்களை கொடுத்தார். அதேவேளை குழந்தையின் பாட்டியார் கணணீர் விட்டு அழுதார். தந்தை ஜெயராஜ் பல முறை வைத்தியர்களுக்கு நன்றி கூறிக்கொண்டே இருந்தார்.

வைத்தியசாலை ஊழியர்கள் வைத்தியர்கள் மற்றும் நீதிமன்ற அங்கததவர்கள் உட்பட அனைத்து சர்வதேச மற்றும் உள்ளூர் ஊடகங்களுக்கும் நன்றி தெரிவித்த பெற்றோர், அங்கிருந்து குழந்தையுடன் அருகிலுள்ள கோயிலுக்குச் சென்று 100 தேங்காய் அடித்து வழிபாடு செய்துவிட்டு பின்னர் தங்கியிருந்த பாண்டிருப்பிலுள்ள உறவினர் இல்லத்திற்கு குழந்தையுடன் சென்றனர்.

அடுத்து தமது சொந்த இடமான கல்முனை - 1 கடற்கரை வீதிக்கு அபிலாசுடன் பயணமாகத் தீர்மானித்துள்ளதாக அவர்கள் தெரிவித்துள்ளனர்.

வைத்தியர் கோபால் முகுந்தன் அபிலாஷின் தந்தையுடன் பேசுகையில் -

குழந்தை சரியான பெற்றோரிடம் செல்ல வேண்டுமென ஒரே விருப்பில் மட்டும் நாம் அனைத்து விடயங்களிலும் ஈடுபட்டோம். உங்களிடம் உங்களது குழந்தை கிடைத்ததில் எமக்கு மிகவும் மகிழ்ச்சி என்றும் தெரிவித்தார். சுமார் ஒன்றரை மாதங்களின் பின்னர் இந்தப் பிரச்சினைக்கு தீர்வு காணப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

# பொது அமைப்புக்கள் இணைந்து இன்று நகரில் கண்டனப் பேரணி!

யாழ்.மாவட்ட பொது அமைப்புக்கள் இணைந்து மாபெரும் கண்டனப்பேரணி ஒன்றை இன்று யாழ். நகரில் நடத்தவுள்ளன.

மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் இ.கௌசல்யன் மற்றும் மூன்று போராளிகள், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அரியநாயகம் சந்திரநேரு உள்ளிட்ட ஆறுபேர் படுகொலை செய்யப்பட்டதைக் கண்டித்தும் -

சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்குவதில் அரசாங்கம் காட்டிவரும் பாரபட்சத்தைக் கண்டித்தும் இந்தப் பேரணி நடைபெறவுள்ளது.

இன்று காலை நல்லூர் ஆலய முன்றலில் இருந்து ஆரம்பமாகும் இந்தக் கண்டனப் பேரணி, கோவில் வீதியூடாக யாழ்.மாவட்ட போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் அலுவலகத்தைச் சென்றடையும்.

அங்கு கண்காணிப்புக்குழுவின் தலைவருககு முகவரியிடப்பட்ட மகஜர்களை யாழ். மாவட்ட பொது அமைப்புக்கள் ஒவ்வொன்றும் தனித தனியாகக் கையளிக்கவுள்ளன.

யாழ்.மாவட்ட கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்கள், யாழ். மாவட்ட வெண்மை வாணிபர் சங்கங்களின் இணையம், யாழ். மாவட்ட சிகையலங்கரிப்பாளர் சங்கம், தீவக பொதுமக்கள் ஒன்றியம் ஆகியவற்றின் பிரதிநிதிகள் மகஜர்களைக் கையளிப்பர்.

# போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் தற்காலிக தலைவராக ஹொக்லண்ட்!

(கொழும்பு)

இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தற்காலிக தலைவராக ஹக்ரப் ஹொக்லண்ட் நேற்றுமுதல் நோர்வே வெளியுறவு அமைச்சர் ஜான் பீற்றர்சன்ால் நியமிக்கப்பட்டுள்ளார்.

இதையடுத்து ஹக்ரப் ஹொக்லன்ட் உடனடியாகவே தனது கடமைப் பொறுப்புக்களை ஏற்றுக் கொண்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கண்காணிப்புக்குழுவின் தலைவரான மேஜர் ஜெனரல் ட்ரொன் புறூவ் ஹொவ்டே, கடந்த மாதம் நடுப்பகுதியிலிருந்து புற்று நோய் காரணமாக கொழும்பிலுள்ள வைத்தியசாலையொன்றில் சிகிச்சை பெற்றுவருகிறார். இந்தநிலையில் மேலதிக சிகிச்சையைப் பெறுவதற்கும், பூரணகுணமடையும் வகையிலும் ஹொவ்டே மேலும் சில மாதங்கள் தனது பணிக்குத் திரும்ப முடியாத நிலையிலுள்ளார்.

இதனையடுத்தே அவர் மருத்துவ விடுமுறையில் செல்வதால், அவருக்குப் பதிலாக - தற்காலிக தலைவராக ஹக்ரப் ஹொக்லன்ட் நியமிக்கப்பட்டிருப்பதாக இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மாமனிதர் குமார் கொலை வழக்கு சந்தேக நபருக்கெதிராக விசாரணை

(கொழும்பு)

மாமனிதர் குமார் பொன்னம்பலத்தை கொலைசெய்வதற்கு உதவிபுரிந்ததாகக் கூறப்படும் சந்தேக நபருக்கெதிரான வழக்கு விசாரணை, மார்ச் 14 ஆம் திகதி நடத்தவுள்ளதாக கொழும்பு மேலதிக நீதிவான் சுஜீவ நிஸங்க நேற்று முன்தினம் தெரிவித்தார்.

இந்தப் படுகொலை சம்பவத்துடன் குற்றம்சாட்டப்பட்டுள்ள சந்தேக நபர் உடுகமரத்ன வீரகே சுத்தத்றோகண என்பவராவார். 1999 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதலாம் திகதிக்கும், 2000 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 5 ஆம் திகதிக்கும் இடையில் வெள்ளவத்தையில் மாமனிதர் குமார் பொன்னமபலத்தைப் படுகொலை செய்வதற்கு இவர் உதவினார் எனக் குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது. (தே)

## புலிகளின்...

பின்னர் இவர்கள் அங்கிருந்து மட்டக்களப்பின் வாகரையிலுள்ள அரசியற்துறை செயலகத்துக்குச் சென்று சுனாமி கடல் அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களை பார்வையிடுவதுடன், அங்குள்ள மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாகவும் கலந்துரையாடவுள்ளனர்.

பின்னர் திருகோணமலை மாவடடத்தில் புலிகள் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் சுனாமியால் ஏற்பட்ட சேதங்கள் குறித்து நேரில் பார்வையிடவுள்ளதுடன் சில நாட்கள் திருகோணமலையில் தங்கியிருந்து அங்குள்ள முஸ்லிம் பிரதிநிதிகளுடன் சந்திப்புக்களை நடத்தவிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## நாணய மாற்று வீதம்

| நாணயம் | கொள்விலை | விற்பனை விலை |
|---|---|---|
| அமெரிக்க டொலர் | 98.93 | 99.86 |
| ஸ்ரேலிங் பவுண் | 186.91 | 189.61 |
| யூரோ | 128.24 | 130.43 |
| சுவிஸ் பிராங் | 82.50 | 84.47 |
| யென் | 0.9408 | 0.9580 |

### பதற்றத்தைத் தணிக்க

# நடவடிக்கை எடுக்குமாறு கண்காணிப்புக்குழுவுக்கு பணிப்பு

(ஒஸ்லோ)

மட்டக்களப்பு-அம்பாறை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் கௌசல்யனின் படுகொலைச் சம்பவம் குறித்து நோர்வே அரசாங்கம் அதிர்ச்சியும் கவலையும் வெளியிட்டிருப்பதாகவும் -

இந்தச் சம்பவத்தை அடுத்து எழுந்திருக்கும் பதற்றத்தைத் தணிக்கும் நடவடிக்கையில் இறங்குமாறு போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவுக்கு நோர்வே அரசு பணித்திருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கௌசல்யனின் கொலையை அடுத்து புலிகள் - இராணுவத் தரப்புக்களுக்கு இடையில் சந்திப்புக்களை ஏற்படுத்தி, பதற்றத்தைத் தணிக்க நடவடிக்கை எடுக்குமாறு நோர்வே அரசாங்கம் கண்காணிப்புக் குழுவிடம் கூறியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நோர்வே அரசாங்கத்தின் வேண்டுகோளையடுத்து யாழ்ப்பாணம், மன்னார், மட்டக்களப்பு, திருகோணமலை, வவுனியா, அம்பாறை மாவட்டங்களின் இராணுவக் கட்டளை அதிகாரிகளையும் புலிகளின் பிரமுகர்களையும் சந்திக்கவைப்பதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டிருப்பதாகவும் தெரியவருகிறது.

## யாழ்.கல்விச...

நகரில் நடத்தப்பட்டது.

காலை 10 மணியளவில் நல்லூர் பின் வீதியிலிருந்து யாழ். பல்கலைக்கழக மாணவர்கள், தமிழ் மாணவர் ஒன்றியம், கல்வியியற் கலலூரி, ஆசிரியர் கலாசாலை, தொழில்நுட்பக் கல்லூரி, பகல் நேர மாணவர் மன்றம், யாழ். மாவட்ட கல்வி மேம்பாட்டுப் பேரவை ஆகியன ஒன்றிணைந்து பதாதைகளை ஏந்தியவாறு நல்லூர் கோவில் பின் வீதியூடாக - அரசே சமாதானத்துக்கு குந்தகம் விளைவிக்காதே, அரசே நிராயுதபாணிகளை யுத்தத்திற்கு இழுக்காதே, அரசே நெருப்புடன் விளையாடி நீ எரிந்து போகாதே, அரசே யுத்த தர்மத்தைப் புறக்கணிக்காதே போன்ற கோசங்களை எழுப்பியவாறு யாழ். மாவட்ட போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் அலுவலகத்தை சென்றடைந்தனர்.

தொடர்ந்து காலை 11 மணியளவில் கண்காணிப்பு குழுத் தலைவருக்கான மகஜர்களை யாழ். மாவட்ட போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு அதிகாரியிடம் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினர், ஆசிரியர் கலாசாலையைச் சோந்தவர்கள், யாழ். கல்வியியற் கல்லூரியினர், தமிழ்மாணவர் ஒன்றியத்தினர், யாழ். வலயக் கல்வி மேம்பாட்டு பேரவையினர், தொழில் நுட்பக் கல்லூரி மாணவர் ஒன்றியத்தினர் ஆகியோர் தத்தமது மகஜரை கையளித்தனர்.

சம்பவத்தில் கருத்துத் தெரிவித்த யாழ். மாவட்ட கண்காணிப்புக் குழு அதிகாரி -

கௌசல்யன் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பாக தாம் ஒன்றும் தெரிவிக்கமுடியாது. ஆனால், கல்விச் சமூகத்தினால் கையளிக்கப்பட்ட மகஜர்கள் அனைத்தையும் தமது அரிகாரியிடம் சமர்பிப்பேன் என உறுதியளித்தார். மேற்படி கண்டனப் பேரணி காரணமாக நேற்று மதியம் 12 மணி வரை கல்வி சமூகத்தின் அனைத்துப் பணிகளும் ஸ்தம்பிதம் அடைநதன.

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 17.02.2005 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.